# பாட்டாளி சிந்தனை

Volume 30 No 3

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)


**S U C I (Communist)**

November 2019

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# மாபெரும் நவம்பர் புரட்சி 102வது ஆண்டு நிறைவு



"மனிதகுலம் உருவாக்கியிருக்கும் அனைத்துக் (அறிவுக்) கருவூலங்களையும் கொண்டு உங்களது சிந்தனையைச் செழுமைப்படுத்திக் கொண்டால் மட்டுமே நீங்கள் ஒரு கம்யூனிஸ்டாக ஆக முடியும்."

(இளைஞர்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து)

**V I லெனின்**

"பூர்ஷ்வா ஜனநாயக சுதந்திரங்கள் எனும் பதாகை தூக்கியெறியப்பட்டுவிட்டது. . . . மனிதர்கள் மற்றும் தேசியங்களுக்கான சம உரிமைகள் எனும் கொள்கை சேற்றிலிட்டு மிதிக்கப்பட்டுவிட்டது; அது சுரண்டிக் கொண்டிருக்கும் சிறுபான்மையினருக்கு முழு உரிமைகள் மற்றும் சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கும் பெரும்பான்மையினருக்கு உரிமைகள் ஏதுமில்லை எனும் கொள்கையினால் அகற்றப்பட்டுவிட்டது."

(சிபிஎஸ்யு **19**வது மாநாட்டில் ஆற்றிய உரை)

**J V ஸ்டாலின்**



# ஈரான் மீது குறிவைக்கும் போர்வெறி ஏகாதிபத்திய அமெரிக்கா

மத்தியக் கிழக்கின்மீது மீண்டும் போர்மேகம் சூழ்ந்துகொண்டுள்ளது. சிரியாவைப் பணிய வைப்பதில் தோல்வியடைந்தபின் தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கவனம் ஈரானின் பக்கம் திரும்பியிருக்கிறது.

மேற்கு ஆசியாவின் அரேபிய நாடுகள், வட ஆப்பிரிக்கா உட்பட மத்திய கிழக்கின் பொருளாதாரரீதியில் வளமிக்கதும் பூகோள–அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான இப்பிராந்தியம் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களின் கேள்விக்கிடமற்ற தலைவனான யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் மிகநீண்டகாலக் குறியாக இருக்கிறது. இந்த பிராந்தியத்தின்மீது தன் பிடியை இறுக்கிக்கொள்ள ஏதாவது ஒரு ஏகாதிபத்திய நாட்டைத் தன்னுடன் கூட்டுசேர்த்துக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து இலக்கைத் தேடியலைந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் மேலாதிக்கத்தை நிறைவேற்றும் சமீபத்திய முயற்சியில் முதலில் ஈராக், பின் லிபியா, அதன்பின் சிரியா, தற்போது ஈரான் உள்ளது. போரையும் போர்ப் பதட்டத்தையும் எப்போதும் வைத்திருக்க சமீப காலமாக ஆப்கானிஸ்தான், சூடான், யேமன் ஆகிய நாடுகளிலும் தலையிட்டு வருகிறது. இறையாண்மை கொண்ட நாடுகளைத் துப்பாக்கி முனையில் ஆக்கிரமித்த ஏகாதிபத்தியத்தின் கொடூரம், மோசடி, வஞ்சகம், கொள்ளைக்கு ஈராக், லிபியா, சிரியா, யேமன் போன்றவை சிறந்த உதாரணங்களாகும். யுஎஸ் ஏகாதிபத்தியத்தின் போர் கட்டமைப்பின் முகமை அலுவலகங்களாக இஸ்ரேல், சவுதி அரேபியா போன்ற சில நாடுகளின் ஆட்சியாளர்கள் நீண்ட காலமாகச் செயல்பட்டுவருகின்றனர்.

ஆனால், தொடர் முயற்சிகள் இருந்தபோதிலும், இப் பிராந்தியத்தின் சக்திவாய்ந்ததும் எண்ணெய் உற்பத்திசெய்யும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றானதுமான ஈரானை பென்டகன் ஆட்சியாளர்களால் தம் கட்டளைக்கேற்ப வளைக்க முடியவில்லை. நீண்ட காலமாக யுஎஸ் ஏகாதிபத்தியரேடாரின் கழுகுப்பார்வையில் ஈரான் இருந்தபோதும் அதன் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுக்கத் தயங்கிவருகிறது. காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சரியான பதிலடி கொடுக்கும் பலத்தை ஈரான் கொண்டிருக்கிறது என்பதால்தான்.

எனவே காரியங்களை சுலபமாகச் செய்து முடிப்பது கடினம் என்பதை கண்டுகொண்ட யுஎஸ் ஏகாதிபத்தியம் தனது கேடுகெட்ட உளவு வேலைகளை முடுக்கிவிட்டு ஈரான்மீது ராணுவத் தாக்குதல் தொடுப்பதற்கான சதிவேலைகளைச் செய்துவருகிறது. தனது பிரிட்டிஷ் கூட்டாளிகளுடன் சேர்ந்துகொண்டு ஈரானிய எண்ணெய்க் கப்பல்களைச் சிறை பிடிப்பது, ஈரானிய ஆக்கிரமிப்பு என்ற இட்டுக்கட்டிய செய்திகளைப் பரப்பிவிடுவது போன்ற எரிச்சலூட்டும் வேலைகளை செய்துகொண்டிருக்கிறது. "தமது மக்களுக்கும் தமது பிராந்தியத்திற்கும் பிரச்சினைகளையும் பாதுகாப்பின்மையையும் யுஎஸ்–யுகே ஏகாதிபத்திய கூட்டணி ஏற்படுத்திவருகிறது" என ஈரானிய அதிபர் மிகச் சரியாகவே சொல்லியிருக்கிறார்.

## யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் கொடூர போர்வெறியர்கள் மட்டுமல்ல, பெரும் பொய்யர்களும்கூட

ஈரானைப் பற்றி மேலும் விவாதிப்பதற்குமுன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தியம் மத்தியக் கிழக்கில் போரைத் தூண்டிவிடுதல் மற்றும் அதன் மோசமான நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாகப் பார்ப்பது தேவைப்படுகிறது. ஏழை நாடான ஆப்கானிஸ்தான் மற்றும் பண்டைய மெசபடோமிய நாகரிகத்தின் சின்னமான ஈராக்கை யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் எப்படித் தாக்கி அழித்தார்கள் என்பது உலக மக்களுக்கு நன்கு நினைவிருக்கும்.

உலக அளவிலும் பிராந்திய அளவிலும் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களைக்கொண்ட சக்திவாய்ந்த பிரச்சார, தொடர்பு கட்டமைப்பை ஏகாதிபத்தியவாதிகள் வளர்த்தெடுத்துள்ளார்கள். ஏகாதிபத்திய போர் திட்டங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் சாதகமாக பொதுக் கருத்தை உருவாக்குவதில் இந்த கட்டமைப்பு திறம்பட பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா ஊட்டிவளர்த்த தலிபான், அல்–கொய்தா போன்ற பயங்கரவாதத்திற்கெதிராக போராடுகிறோம் எனும் சாக்கில் ஆப்கானிஸ்தான் மீது ஆக்கிரமிப்பு செய்வதற்கு இது பயன்படுத்தப்பட்டது. பின் மீண்டும் இதே ஊடகங்கள் முன்னாள் ஈராக் அதிபர் சதாம் ஹுசேனை கொடுங்கோலன் என்றும் மனித உரிமைகளை மீறுபவர் என்றும் பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்பவர் என்றும் சித்தரித்து ஈராக்கில் ஊடுருவுவதற்கான களத்தை ஏற்படுத்திக்கொண்டது. ஈராக் பேரழிவு ஆயுதங்களை தயாரித்ததென்ற குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என்பதை யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடியாட்களும் பின்பு ஒப்புக்கொண்டனர்.

நன்கு நிறுவப்பட்டிருந்த கட்டமைப்புகளை அழித்து, பண்டைய மனித வரலாற்றின் போற்றத்தக்க நினைவுச் சின்னங்களைக் கொள்ளையடித்து ஈராக்கியர்களிடையே வகுப்பு தீயை மூட்டிவிட்டு இறுதியாக, உலக கருத்தை அலட்சியம்செய்து ஒரு போலி விசாரணைமூலம் ஈராக் அதிபரை கொலை செய்ததன் மூலமும், லட்சக்கணக்கான அப்பாவிக் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் கொல்லப்பட்டதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்படிப்பட்ட மனித உரிமைகளை உயர்த்திப்பிடிக்கின்றனர் என்பதை எவரும் அறியலாம்.

## ஈரானை குறிவைத்தல்

ஈராக்கை, பின் லிபியாவை நாசம்செய்த அமெரிக்காவுக்கு தற்போது புதிய இலக்குகள் தேவைப்படுகின்றது. ஈரான் ஒரு வலிமையான நாடு. எனவே ஈரானுடன் யுஎஸ் அமைதி பேச்சு வார்த்தைகளை நடத்திவிட்டு ஈரான் மீதிருந்த தடைகளை விலக்கிக்கொண்டு சிரியாவின்மீது பாய்ந்தது. ரசாயன ஆயுதங்களை வைத்து போரிடுகிறது என்றும், தன் சொந்த மக்களையே ஆயிரக்கணக்கில் கொல்கிறது என்றும் ஏகாதிபத்திய ஊடகங்கள் சிரிய அரசாங்கத்தை குற்றஞ்சாட்டின. காலப்போக்கில் இக் குற்றச்சாட்டுக்கள் பொய்யென நிரூபணமானது. இறுதியில் சிரியா விஷயத்தில் யுஎஸ் முட்டுச்சந்தில் சிக்கிக் கொண்டது. இதற்கிடையே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் பிரதானமாக எதிர்க்கும் எண்ணெய்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## யு எஸ் – ஈரான்

# பலமுறை முயன்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் ஈரானை அடிபணியவைக்க முடியவில்லை

*1ம் பக்கத் தொடர்ச்சி*

வளம்மிகுந்த சிரியாவை தன் பிடிக்குள் கொண்டு வருவதற்காக, தனக்குச் சாதகமான ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தது. முதலில் ஒரு கொடூரமான மறைமுகப் போரைத் தொடுத்ததுடன் பின்னர் நேரடித் தாக்குதலிலும் அமெரிக்கா ஈடுபட்டது.

ஏராளமான மனித உயிர்களையும் சொத்துக்களையும் விலையாகக் கொடுத்த இந்தப் போர் பல வருடங்கள் நீடித்துக்கொண்டிருக்கிறது. ஏராளமானோர் தம் தாய்நாட்டை விட்டு தப்பியோடவும் அந்நிய நாட்டு கடற்கரையை அடைய கொந்தளிப்பான கடலை கடக்கவும் முயற்சித்தனர். இந்நிகழ்வுப்போக்கில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்? உயிர் பிழைத்த மக்கள், குழந்தைகள் எவ்வளவு அபாயத்தை, துன்பத்தை கடந்துவந்தனர்? இது குறித்தெல்லாம் எவ்விதப் பதிவும் கிடையாது. மனித உயிர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காத ஏகாதிபத்திய யுஎஸ்ஸின் இத்தகைய குணாம்சத்தை கண்டுகொள்வது மிகமிக எளிது.

பின்பு, சிறிய, பரம ஏழை அரேபிய நாடான யேமன்மீது 2 வருட கொடூர போர் நிகழ்த்தப்பட்டது. 50,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக ஏற்கெனவே செய்திகள் கூறின. 14மில்லியன் மக்கள்– யேமன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 80% உணவு, சுத்தமான குடிநீர், அடிப்படை மருத்துவ வசதிக்காக திண்டாடிக் கொண்டிருக்கின்றனர், உணவு பஞ்சத்தின் விளிம்பில் அந்நாடு நின்றுகொண்டிருக்கிறது. பலர், குறிப்பாக குழந்தைகள் உணவு கிடைக்காமலும், தடுக்கமுடிந்த காலரா போன்ற நோய்களால் தினந்தோறும் செத்து மடிகின்றனர்.

அவர்கள் செய்த தவறுதான் என்ன? ஆடென், மோச்சா உட்பட பல முக்கிய துறைமுக நகரங்களையும் மத்தியக் கிழக்கின் எண்ணெயை பிற நாடுகளுக்கு எடுத்துச்செல்லக்கூடிய மிகுந்த சௌகரியமான, நன்கு கட்டமைக்கப்பட்ட பைப்லைன்களையும் கொண்ட யேமனின் குடிமக்களாக இருந்ததே அவர்கள் செய்த தவறாகும். இந்த பாதையை தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவர வளைந்து கொடுக்கும் யேமன் அரசாங்கத்தையும் மத்தியக் கிழக்கில் மிகுந்த விசுவாசமுள்ள நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவையும் தன் கைக்குள் போட்டுக்கொண்டு யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் இந்த மறைமுகப் போரை தொடுத்தார்கள்.

பக்கத்திலுள்ள பணக்கார சவுதி அல்லது தொலைதூரத்திலுள்ள 'பரோபகாரி' யுஎஸ் ஏகாதிபத்தியத்தின் தயவு இல்லாமல் தங்களது ஆட்சியாளர்களை யேமனே தீர்மானித்துக்கொள்ள முடியாதா? யுஎஸ்ஸும் அதன் கூட்டாளிகளும் அந்நாட்டின்மீது குண்டுமாரிப் பொழிந்து அப்பாவி மக்கள் லட்சக்கணக்கானோரை கொன்றுகுவித்து, அந்நாட்டின் கட்டமைப்புக்களை அழித்தொழித்த தன்மூலம் பரிதாபத்திற்குரிய மனிதாபிமான நெருக்கடியை தோற்றுவித்திருக்கிறார்கள். அத்துடன் விஷயம் முடியவில்லை.

சவுதி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள்மீது ட்ரோன் தாக்குதல் நடைபெற்றபோது யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளும் சவுதி ஆட்சியாளர்களும் மிக சௌகரியமாக ஹௌதி கிளர்ச்சியாளர்கள் மீது குற்றம் சுமத்தினர், ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கு ட்ரோன்களை சப்ளை செய்ததற்கான பொறுப்பை ஈரான் தலையில் சுமத்த அவர்கள் சூழ்ச்சிகரமாக முயற்சித்தார்கள். கொடூரமான அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஹௌதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் தொடுத்தார்கள் என்று வைத்துக் கொண்டாலும்கூட தங்களுடைய மேலாதிக்க சதித்திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அதிநவீன பயங்கர ஆயுதங்களைக் கொண்டு யுஎஸ்–சவுதி கூட்டணி எவ்வாறு ஒரு சின்னஞ்சிறிய நாட்டை தூள்தூளாக்குவதை நியாயப்படுத்த முடியும்? போர் குற்றத்திற்காக யார் குற்றம் சுமத்தப்படவேண்டும்? ஒடுக்கப்படும் சாதாரண யேமனியர்களா அல்லது கொடிய ஆயுதங்களை வைத்திருக்கும் பணக்கார பென்டகன்–ரியாத் கூட்டணியா?

ஈரானைச் சிக்கவைக்கவும் அதன்மூலம் உலகத்தின் ஒப்புதலைப்பெற்று அந்நாட்டின்மீது ராணுவத் தாக்குதல் தொடுக்கவும் யேமன் ஒரு பகடைக்காயாக பயன்படுத்தப்படுகிறதென்பது தற்போது நன்கு புலப்படுகிறது,

### ஈரான் ஒப்பந்தமும் யுஎஸ் பின்வாங்குதலும்

இந்த இரண்டாயிரம் ஆண்டுத் துவக்கத்திலிருந்தே யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் தாக்குதல் பட்டியலில் ஈரான் வந்துவிட்டது. 'அரக்கர்கள்' என்று அமெரிக்காவால் அழைக்கப்படக்கூடிய பட்டியலில் ஈரான் சேர்க்கப்பட்டபோது அதன்மீது கடும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஈரானின் அணு திட்டம் அப்பிராந்தியத்திற்கு மட்டுமின்றி உலகிற்கும் ஆபத்தானது என்பதும், எனவே அத்திட்டம் நிறுத்தப்படவேண்டுமென்பதும் ஏகாதிபத்தியவாதிகளின் கோரிக்கையாக இருந்தது. அப்படியிருக்கையில், பலமடங்கு சக்திவாய்ந்த யுஎஸ் அணுத்திட்டம் எவ்வாறு நன்நோக்கம் கொண்டதாக, இவ்வுலகிற்கு பயன்தரக்கூடியதாக இருக்க முடியும்? அமெரிக்கா தன் அணு ஆயுதத் திட்டத்தைப் பெருக்கிக் கொள்வதை அப்படியொன்றும் நிறுத்திக்கொள்ளவில்லையே? அமெரிக்கா உலகமுழுக்க தனது ராணுவத் தளங்களை நிறுவி வருவதை நிறுத்திக் கொள்ளவில்லையே. தனது எதிரி என்று கருதக்கூடிய நாடுகளின்மீது அணு ஆயுதங்கள் உட்பட பேரழிவு ஆயுதங்களை உபயோகப்படுத்த ஒருபோதும் அது தயங்கியதில்லையே. அந்நிய நாடுகளில் தன் படைகளை வைத்திருப்பதை நிறுத்திக் கொள்ளவில்லையே.

மனஉறுத்தலின்றி ஒன்றன்பின் ஒன்றாக பிற நாடுகளுக்குள் ஊடுறுவுவதும், உலக முழுதும் பல நூறு ராணுவத் தளங்களை அமைப்பதும், லட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றுகுவிப்பதும் அமெரிக்க ஏகாதிபத்தியமேயாகும். ஆனால் அவர்கள், பிற நாடுகள் ஆயுதங்களை வைத்திருக்கிறது என்றும், தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைக் கைவிடுங்கள் என்றும் அந்நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். என்ன நியாயம் இது?

பொருளாதாரத்தையும் உயிர்களையும் பலி வாங்கிக் கொண்டிருக்கும், கடும் பொருளாதார தடையில் சிக்கிக்கொண்ட ஈரான், ஈரான் அணு ஒப்பந்தம் அல்லது ஈரான் ஒப்பந்தம் என்றறியப்பட்ட ஜாயிண்ட் காம்ப்ரிஹென்சிவ் ப்ளான் ஆஃப் ஆக்ஷன் (JCPOA) எனும் ஒப்பந்தத்தில் ஜூலை 14, 2015இல் ஈரான் நுழைந்தது. இது ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் 5 நிரந்தர உறுப்பினர்களான சீனா, ப்ரான்ஸ், ரஷ்யா, யு கே, யு எஸ், அத்துடன் ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய யூனியனோடு ஈரானையும் உள்ளடக்கியதாகும். இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஈரான் பூர்த்திசெய்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமை (IAEA) உறுதிசெய்தபின் இது அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தமானது, ஈரான் தனது நடுத்தரவகை ஆயுதக் குவியல்களை அகற்றிக்கொள்ள வேண்டுமெனவும், குறைந்த செறிவூட்டப்பட்ட யுரேனிய ஆயுதங்களை, பெருமளவில் அதன் எரிவாயுக் கலன்களை குறைத்துக்கொள்ள வேண்டுமெனவும் போடப்பட்டதாகும்.

முன்னெப்போதும் இல்லாதவாறு, ஈரானின் அனைத்து அணு உலைகளையும் அவ்வப்போது பார்வையிடவும், சேதப்படுத்த முடியாத அணு உலை மூடிகளைப் பொருத்தவும், கண்காணிப்புக் கேமரா, புகைப் படங்கள், அளவீட்டுத் தரவுகள், ஆவணங்களைச் சேகரித்துக் கொள்ளவும் சர்வதேச அணுசக்தி முகமையை அனுமதிக்க இந்த ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

ஈரான் அப்படி ஒப்புக்கொண்டவாறு நடந்து கொண்டதால், அணுசக்தி தொடர்பான வர்த்தகம் மற்றும் நிதித் தடைகள் 16, ஜனவரி 2016இல் விலக்கிக்கொள்ளப்பட்டது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் ஆகியவற்றிலிருந்து நிவாரணத்தையும் பெறத் துவங்கியது. இந்த ஒப்பந்தத்தை ஈரான் முறையாகக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறது என 2018ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குனரான யாகியா அமனோவும், ஏப்ரல் 2016 மற்றும் ஜூலை 2017இல் அமெரிக்க ஆட்சியாளர்களுமே சான்றளித்திருக்கின்றனர்.

ஆனால் 30 ஏப்ரல், 2018இல் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளும் யூதவெறி இஸ்ரேல் ஆட்சியாளர்களும் ஈராக் ஊடுறுவலின்போது சொன்ன அதே வார்த்தைகளையே கூறி, பழைய அணு ஆயுதத் திட்டத்தை சர்வதேச அணுசக்தி முகமையிடம் ஈரான் தெரிவிக்கவில்லை என திடீரென்று அறிவித்தனர். மே 8, 2018இல் மேற்சொன்ன ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வதாக யுஎஸ் தன்னிச்சையாகவும் அதிகாரபூர்வமாகவும் அறிவித்து, ஈரான் மீது இன்னும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த ஈரான் ஒப்பந்தம் "பயனற்றது" எனவும் அணு ஆயுதங்களை பெருக்கிக் கொள்வதிலிருந்து ஈரானைத் தடுப்பதற்காக, அமெரிக்கா அதன் கூட்டாளிகளுடன் சேர்ந்து ஒரு உண்மையான, முழுமையான, ஒரு நீண்டகாலத் தீர்வை எட்டும் எனவும் ட்ரம்ப் அறிவித்தார்.

அமெரிக்க ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கை ஒருதலைப்பட்சமாக இருப்பது மட்டுமின்றி, 2009க்குப் பின்னர் அணுவெடி உபகரணங்களைப் பெருக்கிக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபட்டிருப்பதற்கான நம்பத்தகுந்த அறிகுறிகள் ஏதுமில்லை என சர்வதேச அணுசக்தி முகமை (ஜேசிபிஓஏ) ஒப்பந்தத்தை கடைபிடித்துக் கொண்டிருக்கின்றது என மீண்டும் உறுதி செய்யப்பட்ட பின்னரும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

### ஈரான் மீதான போர்க் காரணங்களும் அச்சுறுத்தல்களும் வழக்கம் போல் பொய்யை அடிப்படையாகக் கொண்டதே

தற்போது, யுஎஸ் ஆட்சியாளர்கள் ஈரானை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர். அமைதி நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக போர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஈரான் பேரழிவு ஆயுதங்களை மட்டுமீறி தயாரித்துக் கொண்டிருக்கிறது, பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது, சுதந்திரத்திற்கான ஈரானிய மக்களின் நம்பிக்கையை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கிறது என வழக்கம்போல் யுஎஸ் கூக்குரலிடுகிறது. கடந்தகால அனுபவங்களிலிருந்து இதை யாரும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. ஈரான் ஒப்பந்தத்திலிருந்து யுஎஸ் தன்னிச்சையாக விலகியதோடன்றி, கட்டுக்கதைகளைக்கூறி வடக்கு வியட்நாம்மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை யுஎஸ் கட்டவிழ்த்துவிட்டதையே நினைவு படுத்துகிறது அதிபர் ட்ரம்ப் தந்திரம்.

ஒரு முக்கியமான கடல்வழி மார்க்கமான ஓமனுக்கும் ஈரானுக்கும் இடையிலுள்ள ஹோர்முஸ் ஜலசந்தியருகே ஒரு ஜப்பானிய எண்ணெய்க் கப்பல் உள்ளிட்ட இரண்டு எண்ணெய்க் கப்பல்கள்மீது– ஒன்று ஜப்பானைச் சேர்ந்தது– ஜூன் 13, 2019 அன்று தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்பட்டது. அது கடலுக்கு அடியில் நடந்த ஒரு கண்ணிவெடித் தாக்குதலாகும். அதற்கு ஈரான்தான் பொறுப்பு என யுஎஸ் நிர்வாகம் கூறியது. ஆனால், இதுவும் பொய்யென மீண்டும் நிரூபிக்கப்பட்டது. ஜப்பான் பிரதமர் ஈரானுக்குச் சென்றபோது இந்நிகழ்வு நடைபெற்றது. ஜப்பான் கப்பல்மீது தாக்குதல் தொடுக்க இதுபோன்றதொரு நேரத்தை, குறிப்பாக யுஎஸ் போன்ற கொடூர வல்லாதிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து போர் மிரட்டல்களை எதிர்கொண்டிருக்கும் நேரத்தை ஈரான் ஏன் தேர்ந்தெடுக்கவேண்டும்? இதற்கிடையில், கண்ணிவெடித் தாக்குதலென்பது "பொய்" ஏனெனில், கப்பலின் மேற்பரப்புதான் சேதமடைந்திருக்கிறது. கண்ணிவெடித் தாக்குதலால் கப்பலின் மேற்பரப்பில்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## யு எஸ் – ஈரான்

# போர் தளவாடங்களை பெருக்கிக்கொண்டிருக்கும் அமெரிக்கா, பிற நாடுகள் தம் தற்காப்பை கைவிட வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது

2ம் பக்கத் தொடர்ச்சி

சேதமேற்படுத்த முடியாது என அந்த ஜப்பானிய கப்பலின் தலைவர் கூறினார். அத் தாக்குதலுக்கு முன்பு “பறக்கும் பொருட்கள்” (flying objects)ஐ கப்பலில் பயணித்தவர்கள் கண்டுள்ளார்கள், எனவே மேலிருந்தே குண்டுகள் வந்திருக்க வேண்டும்.

எந்தத் தாக்குதலுக்கும் தன்னை எவ்விதத்திலும் பொறுப்பாக்குவதை ஈரான் உறுதியாக மறுத்திருக்கிறது, அவ்வாறு ஏதேனும் தாக்குதல் நடைபெற்றிருந்தால் பிராந்திய அளவிலான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம். ஆனால் ஈரானைத் தாக்குவதற்காக விமானத்தாங்கி கப்பல்களையும் B2 குண்டுவீச்சு விமானங்களையும் ஏவுகணைத் தடுப்பு பாதுகாப்பு சாதனங்களையும் (Assault Carrier USS Boxer) இப்பிராந்தியத்திற்கு அனுப்புவதன்மூலம் யுஎஸ் ஆட்சியாளர்கள் பகிரங்க மிரட்டல் விடுத்தனர். அதன் கப்பற்படை விமான தாங்கி கப்பல்களைக்கொண்டு கடந்த மாதம் அரேபிய கடலில் அது ஒத்திகை நடத்தியது. அது தன் ராணுவ வலிமையைக் காண்பிப்பதற்கான ஒரு நாடகமாகும். அதே சமயத்தில், ஈரானின் ஆதரவுபெற்றதென சொல்லப்படும் ஈராக்கிலுள்ள ஷியா சக்திகள் மீது குறைந்தபட்சம் ஒரு சந்தேகத்திற்குரிய இஸ்ரேலியத் தாக்குதலாவது இருந்தது. தன் வான் எல்லைக்குள் பறந்த யுஎஸ் ராணுவ உளவு ட்ரோனை ஈரானும் சுட்டு வீழ்த்தியது. சமீபத்திய செய்தியின்படி, ஹௌதிகளுக்கு ட்ரோன்களை கொடுத்துதவியதாக ஈரான் மீது அமெரிக்க குற்றஞ்சாட்டியிருக்கிறது.

மிகச் சரியாக, போர் புரியவில்லையானாலும் கூட, யுஎஸ்ஸும் அதன் கூட்டாளிகளும் மிகக் குறிப்பாக யூதவெறி இஸ்ரேலும் போர்ப் பதட்டத்தை எப்போதும் வைத்திருப்பதற்கான வேலைகளை செய்துகொண்டிருக்கின்றன.

ஈரான்மீது யுஎஸ் ஏகாதிபத்தியம் இன்னும் அதிக தடைகளை விதிக்கிறது, ஈரானின் எண்ணெயை வாங்கவேண்டாமென பிற நாடுகள் அனைத்தையும் யுஎஸ் நிர்ப்பந்தப்படுத்திவருகிறது. இந்த கேடுகெட்ட விளையாட்டின்மூலம் ஈரானின் வருமானத்தில் எண்ணெய், கேஸ் ஏற்றுமதி மூலமான 40%மாக இருக்கக்கூடிய அதன் பொருளாதாரத்தை முடக்கிவிடமுடியும் என அது நினைக்கிறது. யுஎஸ்ஸின் அதிகரித்த போர் நகர்த்தல்களுக்குப்பின் நவம்பர் 2018க்குப்பின் ஈரானின் எண்ணெய், கேஸ் ஏற்றுமதி கடுமையாகச் சரிந்திருக்கிறது. ஈரானிய மக்களின் வாழ்க்கையை முடக்கிப்போடும் நோக்கங்கொண்ட இதுபோன்ற நடவடிக்கைகள், சமூக அமைதியின்மையை ஏற்படுத்தி ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரவும், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளோடு சமரசம் செய்துகொள்ளவும் அமெரிக்காவின் கட்டளைகளுக்கு அடிபணியக் கூடியதுமான ஒரு ஆட்சியைக் கொண்டுவருவதற்காக தெருவில் வந்து போராட மக்களை நிர்ப்பந்திக்கும்.

### யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இம்முறை அவ்வளவு எளிதாக இல்லை

இருந்தபோதிலும், ட்ரம்பின் போர்வெறி அணுகுமுறைக்கு இம்முறை பல்வேறு மட்டங்களில் எதிர்ப்பு நிலவுகிறது. யுஎஸ் தலைமையிலான நேட்டோ உறுப்பு நாடான துருக்கி, ஈரானுடன் எல்லையைப் பகிர்ந்து கொண்டிருப்பதால், யுஎஸ்ஸின் தடைகளை அது ஆதரிக்கவில்லை ஈரானுடன் வர்த்தகத்தை நிறுத்திக் கொள்ள முடியவில்லை. ஈரானுடைய எண்ணெய், எரிவாயு மலிவாக இருப்பதால் ஈரானுடனான உறவை முறித்துக்கொண்டால் அது தங்களது வர்த்தகத்திற்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்பதால் ஐரோப்பிய நாடுகள் யுஎஸ்ஸை குருட்டுத்தனமாக ஆதரிக்க மறுக்கின்றன.

“ப்ரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகள் தடைகளை சட்டப்பூர்வமாகவே தாண்டிச்செல்லக் கூடிய ஈரானுக்கு பணம்கட்டும் இன்ஸ்டெக்ஸ் என்று சொல்லக்கூடிய முறையை ஏற்படுத்திக் கொண்டன. அது துவக்கப்படவிருக்கிறது”, யுஎஸ்ஸின் மிரட்டல்கள் “கேடுகெட்ட அறிவுரைகள்” தன்னிச்சையானது என ஜெர்மனியின் வெளியுறவு அமைச்சர் கூறினார். இன்னொரு ஈராக்கை ஐரோப்பாவில் எவரும் விரும்பவில்லை என ஆஸ்திரேலிய அதிபர் எச்சரித்திருக்கிறார். யுஎஸ்ஸின் நகர்த்தல்கள் எரிச்சலூட்டக்கூடியவை என அவர் கூறினார். ப்ரான்ஸும்கூட இரு மனநிலையில் இருக்கிறது.

ஈரானுக்கெதிரான போரில் தங்களுடைய நிலப்பகுதியை உபயோகித்துக்கொள்வதற்கு எதிராக ஈராக் அதிகாரிகள் பென்டகனுக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இணங்கிச் செல்லும் வளைகுடா மன்னர்கள்கூட அச்சத்தை வெளியிட்டிருக்கிறார்கள். யுனைடெட் அராப் எமிரேட்ஸின் வெளியுறவு அமைச்சர் அன்வர் கார்காஷ், “ஈரான் மீது பிரச்சினையை ஏற்படுத்தி, முரண்பாட்டை வளர்த்துக் கொள்வதால் எவருக்கும் பயனில்லை” என்று கூறியிருக்கிறார்.

யுஎஸ்ஸின் ராணுவ நகர்த்தல்களுக்கு எப்போதும் ஆதரவளிக்கும் டெமாக்ரடிக், ரிபப்ளிக் கட்சியை சேர்ந்த யுஎஸ் காங்கிரஸ் உறுப்பினர்கள், கூடுதல் தகவல்கள் வேண்டும் என்ற சாக்கில் ஆதரவளிக்காமல் விலகிக் கொண்டனர். 2003இல் தவறான தகவல்களின் அடிப்படையில் யுஎஸ்ஸின் ஈராக்கிய ஊடுருவலால் பல பேரழிவுகள் ஏற்பட்டதாக பலர் கேள்வியெழுப்புகின்றனர்.

“அமெரிக்காவை நம்பாதே என ஆரம்பத்திலிருந்தே நான் கூறிவருகிறேன்” என ஈரானிய தலைவர் அயதுல்லா அலி காமெனி கூறினார். ஈரான் பாராளுமன்றத்தில் அமெரிக்க கொடியை எரிக்குமளவிற்கு யுஎஸ் எதிர்ப்புணர்வு சென்றுள்ளது.

இரு தரப்பு அணு உடன்படிக்கையை தன்னிச்சையாக முறித்துக்கொண்டபின், ஒவ்வொரு நாடும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை பெற்றிருக்கிறதென்ற அடிப்படையில் குறைந்தபட்சம் பகுதியளவாவது தன் அணுசக்திச் செயல்பாடுகளை ஈரான் மீண்டும் தொடங்கப் போவதாக எச்சரித்திருக்கிறது. குறிப்பாக, யுஎஸ் ஏகாதிபத்தியக் கொள்ளையர்களால் போர் மிரட்டல் வந்துகொண்டிருக்கும் இந்நேரத்தில், ஈராக்கை நிராயுதபாணியாக்கியபின் அந்நாட்டை ஆக்கிரமித்த வரலாற்றை கண்டபின் அணுஆயுதப் பாதுகாப்பில் தஞ்சமடைவதைத் தவிர ஈரானுக்கு வேறுவழியில்லை. யுஎஸ்ஸிடமிருந்து வரும் தகாத அழுத்தத்திற்கு துணைபோக வேண்டாம் என ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகளையும் தெளிவுபடுத்த ஈரான் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

யுஎஸ் விதித்திருக்கும் புதிய நிபந்தனையானது, ஈரான் நாட்டின் முக்கிய சிவில் அணுசக்தி நடவடிக்கைகளுக்கும் அதன் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டத்திற்கும் தடை விதிப்பது மட்டுமின்றி, சிரியா. ஈராக், யேமன் மீதான அதன் வெளியுறவுக் கொள்கைகளுக்கும் கூட தடை விதிக்கிறது. யுஎஸ் அரசாங்கத்திற்கு திறம்பட அடிபணியவும் ஒரு டஜன் கோரிக்கைகளுக்கு ஒத்துக்கொள்ளவும் கோருமளவிற்கு யுஎஸ் அமைச்சர் சென்றிருக்கிறார்.

புதிய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளெல்லாம் குரல்வளையையே நெறிக்கக்கூடியதெனவும் நாட்டின் இறையாண்மையையே கீழிறக்கக்கூடியது என்பதால் இவை ஈரானால் ஏற்றுக்கொள்ள முடியாதவை என ஈரான் தெளிவுபடக் கூறிவிட்டது. மே 14, 2019இல் மூத்த அதிகாரிகளுடனான ஒரு கூட்டத்தில் ஈரானின் தலைவர் அலி காமெனி மற்றொரு அணு ஒப்பந்தத்தின் மீதான யுஎஸ் உடனான பேச்சுவார்த்தை என்பது “விஷத்”திற்கு சமமானதாகும், “நாங்கள் எந்தப் போரையும் விரும்பவில்லை” எனவும் கூறிவிட்டார். “போரானது அவர்கள் நலனுக்கும் எதிரானது” என்றும் கூறினார்.

### ஏகாதிபத்தியம் போரை உருவாக்குகிறது, போர் மூலமே உயிர்வாழ்கிறது

எக்காரணத்துக்காக ஏகாதிபத்தியவாதிகள் அல்லது ஏகாதிபத்தியம் போர்வெறி கொண்டதாக இருக்கிறது என்ற கேள்விக்கான விடையை அனைவரும் அறிய வேண்டும்.

ஏகாதிபத்தியம் போரை உருவாக்குகிறது என லெனின் தெளிவாக குறிப்பிட்டார். முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த விதியின் காரணமாக தவிர்க்கஇயலாமல் அது நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்கிறது, சந்தை நெருக்கடியானது ஒருபோதும் தணியாது, மாறாக ஒவ்வொரு நாள் கடக்கும் போதும் அது மேலும் தீவிரமடைகிறது. அது தொழிற்சாலைகளை இழுத்து மூடுகிறது, தொழில் தேக்கத்திற்கு இட்டுச்சென்று, பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

சந்தையை செயற்கையாக முடுக்கிவிட முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் பொருளாதாரத்தை ராணுவமயமாக்குவதை அதிகரிக்கிறது, ஒரு ராணுவ–தொழில் கூட்டணியை ஏற்படுத்துகிறது. அந்தக் கூட்டணியானது மக்களுக்கு எது தேவையோ அதை உற்பத்தி செய்வதில்லை; ராணுவத் தளவாடங்களையும் அதற்கான உபகரணங்களையுமே உற்பத்தி செய்கிறது. அவை ஏதோ விளையாடுவதற்காக அல்ல, போர்களில் அல்லது போர் போன்ற சூழ்நிலைகளில் அவற்றை உபயோகப்படுத்தவேயாகும். இருப்பு ஒருமுறை தீர்ந்துவிட்டால் புதிய உற்பத்திமூலம் அது மீண்டும் நிரப்பப்படும். எனவே அது போரை வேண்டுகிறது, முழுமையான அல்லது பகுதியளவான, நிரந்தரமாக அல்லது தற்காலிகமான போர் அதற்குத் தேவைப்படுகிறது.

தீர்க்க முடியாத முதலாளித்துவ நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு, ஒவ்வொரு நாட்டிலும் பிரம்மாண்டமான தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன், ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்து மிகப்பெரும் ஆயுதத் தொழிற்சாலைகள் வளர உதவுவதன் வாயிலாக அத்தகைய போர்கள் நடத்தப்படுகின்றன. போரையும் போர்ப் பதட்டத்தையும் வைத்து ஆயுதங்கள் பயன்படுத்தப் படுகின்றன. ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கெதிராக தூண்டிவிடப்படுகிறது, அதன்மூலம் ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்தும் போர் வியாபாரிகளிடமிருந்தும் இரண்டு நாடுகளும் ஆயுதங்களை வாங்குகின்றன. இவ்வாறு உற்பத்தியை பெருக்குவதற்கான, மேலும் பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான தூண்டுதலை தொழிற்சாலைகள் பெறுகின்றன. இது இவ்வாறே தொடர்ந்து நடைபெறுகிறது.

அவர்களாலேயே உருவாக்கப்படும் போர்களில் ஆயுதங்களைப் பயன்படுத்திக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளும் அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும் அவற்றைப் பிற நாடுகளுக்கும் விற்பனை செய்கின்றன. இதைத்தான் யுஎஸ் ஏகாதிபத்தியம் ஈரான்–ஈராக் போரில் செய்தது. அது ஈரானுக்கு ஆயுதங்களை விற்றது, ஈரானில் எங்கு குண்டுகளைப் போட வேண்டுமென்ற வரைபடத்தை (Map) ஈராக்கிற்கு தந்தது. விபரங்கள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

சிப்ரி (SIPRI - Stockholm International Peace Research Institute) என்ற ஆய்வு நிறுவனம் டிசம்பர் 10, 2018இல் வெளியிட்ட செய்தியின்படி யுஎஸ் கம்பெனிகள் 2017இல் 222.6பில்லியன் டாலர்களுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளன. அதாவது 2014–2018ற்கு இடைப்பட்ட காலத்தில் மத்திய கிழக்கிற்கு செய்த மொத்த ஏற்றுமதியில் 52%மாகும் இது. சுகாதாரம், கல்வி, துப்புரவு, வீட்டுவசதி, சமூக நலத் திட்டங்கள் போன்றவற்றிற்கான ஒதுக்கீடுகளின் பெரும் பகுதியை பாதுகாப்புத் துறை விழுங்கிவிடுகிறது. அதே வேளையில் சாதாரண மக்கள் தியாகம் புரியவும் மேலும் மேலும் வரிசெலுத்தவும் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். இது தொடர்ந்து கொண்டே செல்லும்.

போர் தொழில்கள் வளங்கொழிக்கும். தேயும் பொருளாதாரம் சமாளித்துக்கொள்ளும். எனவே, பொருளாதாரம், அரசியல் ஆகிய இவ்விரு நலன்களையும் பேணிப் பாதுகாக்க போர், போர் போன்ற சூழ்நிலை, போர் பதட்டம் ஆகியன முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்திற்கு அடிப்படை

தொடர்ச்சி 4ம் பக்கம்

# விவசாயிகள் விரோத ஆசிய பசிபிக் ஒப்பந்தம்

**விவசாயிகள் விரோத தொழிலாளர் விரோத ஆர்செப் எனப்படும் (ஆசிய பசிபிக்) விரிவான பிராந்தியப் பொருளாதார ஒப்பந்தம் (Regional Comprehensive Economic Partnership)**

நவம்பர் *4, 2019* அன்று தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற இந்த ஒப்பந்தத்தில் சீனா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தையும் சேர்த்து *10* ஆசிய நாடுகளுடன் இந்தியாவும் கையொப்ப மிடவிருந்தது. இதையெதிர்த்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வெகுஜன அமைப்பான அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்க அகில இந்தியக் கமிட்டி (AIKKMS) உள்ளிட்ட இந்தியாவிலுள்ள பல்வேறு விவசாய அமைப்புகள் நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தின. இதன் பின்னணியில் இந்திய அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பம் இடவில்லை எனவும், சில காலம் வரையில் இருதரப்பு பேச்சு வார்த்தை மூலம் முதலில் ஆஸ்திரேலியாவுடனும், நியூசிலாந்துடனும் பின்னர் பிற ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தகத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என எண்ணியிருப்பதாகவும் தெரிகிறது. நிலுவையிலுள்ள இந்தியாவின் பிரச்சினைகளை ஆர்செப்பில் பங்குகொண்ட அனைத்து நாடுகளும் பின்னர் ஒன்றுகூடிப்பேசி, பரஸ்பரம் திருப்தியளிக்கும் வகையில் பின்னர் பேசி முடிவெடுக்கலாம் எனவும் மேற்கண்ட ஒப்பந்த கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

உலகமயம்–தாராளமயத்திற்குப் பின், ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வில் இந்திய ஆளும் முதலாளித்துவத்தின் மற்றும் அதன் அரசாங்களின் சமீபத்திய நடவடிக்கைகள் ஏற்படுத்தியிருக்கும் பேரழிவை மக்கள் நன்கறிவார்கள். உலகமயம்–தாராளமயம் அறிமுகப்படுத்தப்பட்ட, கிட்டத்தட்ட 7–8 ஆண்டு களுக்குப் பின்பு, **28 ஜூலை 2000** த்தில் 'தேசிய விவசாயக் கொள்கை, *2000*' (National Agricultural Policy 2000) என்ற ஒரு ஆவணத்தை இந்திய அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைத்தது. அதில் கூறப்பட்ட நோக்கம், விவசாயம் தாராளமயமாக்கப்பட்ட, உலகமயமாக்கப்பட்ட ஒரு சூழலில் இந்திய விவசாய வளர்ச்சியை மறுமலர்ச்சியடைச் செய்வதற்கான உத்திகளைப் புகுத்துவதாகும். முந்தைய பிற கொள்கைகளைப் போன்றதே, இக்கொள்கையும்கூட வேளான் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்ற பகட்டான அறிவிப்புகளைத் தந்தது. ஆனால் அதன் உண்மையான விருப்பம், பொருளாதார தாராளமய விதிகளை அனுகூல மாக்கிக்கொண்டு, வேளான் உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேளான் அடிப்படையிலான தயாரிப்புகள் ஏற்றுமதியை ஊக்கப்படுத்தவும், அதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் புதிய விதைகொள்கை, தேசிய உரக்கொள்கை, தேசிய நிலக்கொள்கை, தேசிய நீர்க்கொள்கை, ஒப்பந்தமுறை விவசாயம், உணவுதானிய உற்பத்திக்குப்பதிலாக பணப்பயிர்கள் உற்பத்திக்கு மாறுவது, வேளான் துறையை அந்நிய மூலதனத்துக்கு திறந்துவிடுவது போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக உள்நாட்டு மற்றும் அந்நிய பன்னாட்டு நிறுவனங்களின் லாபம் அதிகப்படுத்துவதை உத்திரவாதம் செய்வதாகும். இத்தகைய கொள்கைகளை மேம்போக்காகப் பார்த்தால் அவற்றின் பின்னாலிருக்கும் நோக்கம் நன்கு வெளிப்படும். மேற்கண்ட இந்த ஆர்செப் ஒப்பந்தமும் உலகமயம்–தாராளமயத்தின் ஒரு பங்கும் பகுதியுமேயாகும். எனவே, இந்த ஒப்பந்தத்தில் இந்தியா பின்னர் இணைந்துகொள்ளாது என்பதற்கான உத்தரவாதம் ஏதுமில்லை.

உலகமயம்–தாராளமயக் கொள்கைகள் மக்கள் வாழ்வில் ஏற்கனவே நாசகர விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கையில், ஆசிய பசிபிக் நாடுகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இந்த ஆர்செப் ஒப்பந்தமும் சாமானிய மக்களை வறுமையிலும் துயரத்திலும் நிச்சயம் தள்ளும். உதாரணமாக, ஆர்செப் – சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் வளர்ந்த நாடுகள் வைத்திருக்கும் கோரிக்கைகளை, குறிப்பாக பால் பொருட்களை மிகப் பெருமளவில் ஏற்றுமதி செய்யும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் பால் பொருட்களுக்கான இறக்குமதி வரியைக் குறைக்கக் கோருவதை மத்திய அரசாங்கம் ஏற்கவிருப்பது மற்றொரு கடுமையான குற்றமாகும். இது ஏற்றுக்கொள்ளப் படுமானால், பெருமளவில் தற்கொலை செய்துகொண்டிருக்கும் விவசாயிகள் எஞ்சியிருக்கின்ற நம்பிக்கையையும் இழந்துவிடுவார்கள்.

விவசாயத்தில் பணத்தைக் கொட்டி செலவழித்துக் கொண்டிருக்கும் விவசாயிகள், அவர்கள் லாபம் ஈட்டுவது ஒருபுறமிருக்க, செலவு செய்த பணத்தைக்கூட திரும்பப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். வறட்சி மற்றும் விவசாயத்தில் ஏற்படும் இழப்புகளால் பாதிக்கப் படும் விவசாயிகளை பால் உற்பத்தித் தொழில்தான் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே இவர்கள், இந்தியாவின் தேவைக்கும் அதிகமாகவே உற்பத்தி செய்துகொண்டி ருக்கின்றனர். பால் உற்பத்திப் பொருட்களைப் பிரித்தெடுக்கும் தொழிலும் செய்யப்பட்டு வருகிறது. எனவே பால் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையே எழவில்லை.

அதிநவீனமயமாக்கப்பட்டு, எந்திரமயமாக்கப் பட்டு பரந்த அளவில் பால்பொருட்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கும் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளோ அவை உற்பத்தி செய்வதில் முறையே **93** சதவீதத்தையும் மற்றும் **95** சதவீதத்தையும் ஏற்றுமதி செய்கின்றன. இத்தொழிலில் நியூசிலாந்தில் **10,000** பேரும் ஆஸ்திரேலியாவில் **6,000** பேரும் வேலை செய்துகொண்டிருக்கையில் நம் நாட்டிலோ **10** கோடிக்கும் மேலானவர்கள் இதில் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். அந்நாடுகளின் மலிவான பால் உற்பத்திப் பொருட்கள் இந்தியச் சந்தையில் நிரம்பி வழியுமானால், அதிகப்படியான உற்பத்திச் செலவால் இந்திய விவசாயிகள் சந்தை போட்டியை எதிர்கொள்ள முடியாமல் வீழ்வார்கள். இது இங்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவுவதோடு, வெளிநாடுகளில் அவர்களுக்கு பிற பொருட்களுக் கான சந்தையையும் பெற்றுத்தரும்.

ஆர்செப் – சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுமானால், 10 கோடிக்கும் மேலான இந்தியர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழப்பதுடன், பால் பொருட்கள் உற்பத்தியைச் சார்ந்திருக்கும் இன்னும் பலகோடி பேர் வீதியில் வீசப்படுவார்கள் என ஓர் மதிப்பீடு கூறுகிறது. மேலும், பால் உற்பதி செய்து தங்கள் சொந்தக் கால்களில் நிற்கின்ற விவசாயப் பெண்கள் பொருளாதாரச் தர்சார்புத் தன்மையை இழந்து துயரத்தில் ஆழ்த்தப்படுவார்கள். ஆக, வியர்வை சிந்தி கட்டியமைக்கப்பட்ட கர்நாடகாவின் கேஎம்எஃப் மற்றும் குஜராத்தின் அமுல் போன்ற நிறுவனங்கள் மூடப்படும் அச்சுறுத்தலை எதிர் கொண்டிருக்கின்றன. இந்த கூட்டுறவு நிறுவனங் களை நம்பி வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் தொழிலாளர்களும், வினியோகஸ்தர்களும் மற்றும் இன்னும் பிறரும் வேலையை இழப்பார்கள். இதைபோன்றே பிற விவசாய உற்பத்திப் பொருட்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு திறந்து விடப்படுமேயானால், இன்னும் பலகோடிப் பேர் வேலையிழப்பார்கள். இறுதியில் அது இளைஞர் களை நகரங்களுக்கு புலம் பெயரச் செய்து வேலையற்றோர் பட்டாளத்தில் இணைவதற்கு இட்டுச் செல்லும். அல்லது மலிவான உழைப்புக்கு பலியாவதற்கு இட்டுச் செல்லும். ஏற்கனவே பாலைவனமாகக் காட்சியளிக்கும் கிராமங்கள் வயதானவர்கள் இல்லங்களாக முழுமையாக ஆகிவிடும்.

ஆக, இத்தகைய மக்கள் விரோத, விவசாயிகள் மற்றும் தொழிலாளர் விரோத ஆர்செப் ஒப்பந்தத்தை எதிர்க்க வேண்டிய கடமையை சரியாகச் சிந்திக்கக்கூடிய இந்திய மக்கள் அனைவரும் உணர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம் ■

## யு எஸ் – ஈரான்

# போர்க் குணமிக்க எதிர்ப்பு இயக்கமே ஏகாதிபத்தியத்திற்கு ஓரே தடையரண்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

ஆதாரம். போர்வெறி யுஎஸ் ஏகாதிபத்தியத் திற்கும்கூட இது உண்மையாகும். எனவே, மத்தியக் கிழக்கில் பல பத்தாண்டுகளாக போர் மற்றும் போர் பதற்றத்தை யுஎஸ் துரிதப்படுத்திவருகிறது.

### ஆயுதமற்ற நிலையை உருவாக்க யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் மறுக்கிறார்கள்

இரண்டாம் உலகப் போருக்குப்பின், போர் பேரழிவிலிருந்து உலகை விடுவிக்க அணு ஆயுதம் மட்டுமல்லாது ஒட்டுமொத்த நிராயுதநிலையை எட்டவேண்டுமென உலக உழைக்கும் மக்களின் மாபெரும் தலைவர் ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்தார். ஆனால் யுஎஸ்ஏ இதற்கு மறுத்துவிட்டது. இதை சோவியத் யூனியன் அறியும். எனவேதான், மரபுவழி, அணுஆயுதம் ஆகிய இரண்டிலும் தீர்மானிக்கும் சக்தியாக திட்டமிட்டே தன்னை ரஷ்யா உருவாக்கிக்கொண்டது. அதன் காரணமாகவே, அந்நேரத்தில் ரஷ்யா ஏகாதிபத்திய வாதிகளை மிகப்பெருமளவு கட்டுப்பாட்டில் வைக்கமுடிந்தது.

பின்பு, ரஷ்யாவைத் திருத்தல்வாதம் பீடித்து இறுதியில், எதிர்ப்புரட்சிமூலம் முதலாளித்துவ நாடாக அது மாறியவுடன் போர்வெறி ஏகாதி பத்தியவாதிகளின் மீதான கட்டுப்பாடு மெல்ல மெல்லத் தேய்ந்து தற்போதைய ஒன்றுமில்லாத நிலைக்கு வந்துவிட்டது. எனவே, தம் மக்களுடைய அடிப்படை தேவைகளை புறந்தள்ளினாலும்கூட பலவீனமான நாடுகள் தம் சொந்த பாதுகாப்பிற் காக அணு ஆயுதத்தை நோக்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டன.

### போர்க் குணமிக்க எதிர்ப்பு இயக்கமே ஏகாதிபத்தியத்திற்கு ஓரே தடையரண்

தன்னுடைய உறுதியான நிலைப்பாட்டில் ஈரான் இருப்பது சரியானதாக இருக்கலாம். ஆனால், அதேசமயம் அனைத்துப் போர்களுக்கும் முதலாளித்துவம்–ஏகாதிபத்தியமே மூலக்காரணம் என்பதை ஈரான் மற்றும் உலகத்தின் சுரண்டப் படும் கோடிக்கணக்கான மக்கள் மனதில் கொள்ளவேண்டும்.

சோசலிசத்தின் இருத்தலே முதலாளித்துவ வாதிகளைப் போர் தயாரிப்புகளுக்குக் கட்டாயப் படுத்துகிறது என முன்பு முதலாளித்துவவாதிகள் வாதிட்டு வந்தனர். ஆனால், சோசலிச முகாமின் வருந்தத்தக்க வீழ்ச்சிக்குப்பின்பும் உலகின் ஏதாவது ஒரு பகுதி போர் அபாயத்தை எதிர் கொண்டுவருவதைப் பார்க்கையில், மேற்சொன்ன வாதம் எவ்வளவு அபத்தமானதென்பது தெள்ளத்தெளிவாகிறது. முதலாளித்துவம் இருக்கும்வரை போர் அபாயம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

அமைதி விரும்பும் மக்களிடம் ஓரே வழிதான் இருக்கிறது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்த குறிப்பாக, கொள்ளையர்களின் தலைவனான யுஎஸ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போர்க்குணமிக்க இயக்கத்தை வளர்த்தெடுக்கவேண்டும். சித்தாந்தரீதியாக, அமைப்புரீதியாக உறுதியாக நிற்கக்கூடியதும் வரலாற்றின் சரியான திசைவழியில் கொண்டுசெல்லக்கூடியதுமான சக்திகளை இவ்வியக்கத்தின் மையக்கருவாகக் மனித இனத்தின் விரோதியாக இருக்கக்கூடிய முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்தை முறியடிக்கப் போராடுவதே அவ்வழியாகும்.

இவ்வுண்மையை உட்கிரகித்து அதற்கேற்ப செயல்படுமாறு ஒடுக்கப்படும் ஈரானிய மக்களுக்கும் மத்தியக் கிழக்கின் முழுவதுமுள்ள போர் எதிர்ப்பு மற்றும் அமைதி விரும்பும், அதேபோல உலகின் பிற நாடுகளிலுமுள்ள மக்களுக்கும் அறைகூவல் விடுக்கிறோம் ■

# நாட்டில் அறிவியல்பூர்வ, பகுத்தறிவுச் சிந்தனையை ஆர்எஸ்எஸ்–பாஜக அழித்தொழிக்க விரும்புகிறது

## – தோழர் பிரவாஸ் கோஷ்

*(எங்கள் தலைவரும் ஆசானும், வழிகாட்டியும், இச்சகாப்தத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் நினைவுதினமான ஆகஸ்ட் 5இல், மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவிலுள்ள நேதாஜி உள் அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஆற்றிய உரை. இந்த உரையில் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் தற்போதைய அரசியல் சூழலின் பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விவாதித்துள்ளார். இதன் முதல் பகுதி அக்டோபர் Vol 30, No 2இல் பிரசுரமானது. இதன் இரண்டாம் பகுதி தற்போது வெளியிடுகிறோம். இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் நிறைவடையும்)*

### இந்திய மறுமலர்ச்சியின் முன்னோடிகள் உயர்த்திப்பிடித்த அறிவியல்பூர்வ பகுத்தறிவுச் சிந்தனையை பாஜக அழித்தொழிக்க விரும்புகிறது

தீய பிரச்சாரத்தினால் அல்லது பணம் மற்றும் அற்ப ஆதாயங்களுக்கு ஆசைப்பட்டு தவறாக வழிநடத்தப்பட்டுக்கொண்டு ஆர்எஸ்எஸ்–பாஜக கொடிகளைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள், இந்திய மறுமலர்ச்சியின் போற்றத்தகு தலைவர்களின் சித்தாந்தத்தையும் அவர்கள் வகித்த பாத்திரத்தையும் ஆர்எஸ்எஸ்–பாஜக முற்றிலும் மறுதலிப்பதை அறிவார்களா? இந்திய மறுமலர்ச்சிக் காலகட்டத்தின்போது, ராஜா ராம்மோகன் கூறினார்: "இந்நாட்டை இருளிலேயே வைத்திருக்கவேண்டுமானால், அதற்கு சமஸ்கிருதக் கல்விதான் மிக உகந்ததாகும். . . இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அறிந்தவற்றை அங்கு மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஆயினும் அரசாங்கம், அப்போதிலிருந்து நடைமுறையறியாமல் யூகம் செய்பவர்கள் உருவாக்கிய அத்தகைய அறிவுடன், வீணான கண்ணுக்குப் புலப்படாதவற்றைப் போதிக்கும்பொருட்டு, இந்து சமயப் பண்டிதர்களைக்கொண்ட சமஸ்கிருதப் பள்ளியை நிறுவிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். . . வேதாந்தம் என்பது கீழ்க்கண்ட கற்பனையானவற்றை முன்வைப்பதால், யூகங்கள் அடிப்படையிலான அத்தகைய கல்வி மூலம் ஒருபோதும் முன்னேற்றத்தைக் காண முடியாது. . . வேதாந்தக் கோட்பாடுகள் என்பது, நம் கண் முன்னே காண்கின்ற அனைத்தையும் உண்மையில் இல்லையென போதிப்பதால், இளைஞர்கள் சமுதாயத்துக்கு பொருத்தமான நல்ல மனிதர்களாக ஆகவும் முடியாது. . . ஆனால், தம் சொந்த மக்களின் மேம்பாடு அரசாங்கத்தின் நோக்கமாக இருப்பதால், அதன் காரணமாக அது கணிதம், இயற்கைத் தத்துவம், வேதியியல், உடற்கூறியல் மற்றும் பிற பயன்தரும் அறிவியல்களைத் தழுவிய ஒரு மிகவும் பரந்துபட்ட, அறிவொளிமிக்க போதனை முறையை ஊக்குவிக்கும். . ."

இவரைப் பின்பற்றி, மறுமலர்ச்சியின் தலைசிறந்த மனிதரான வித்யாசாகர் இந்திய மறுமலர்ச்சியின் துவக்க காலத்தில் இவ்வாறு கூறுகிறார்: "வேதாந்தமும் சாங்கியங்களும் பொய்யான தத்துவங்கள் என்பதில் இன்று கருத்து வேறுபாடு ஏதுமில்லை. . . வேதமும் வேதாந்தமும் தவறான தத்துவமுறைகள் என்பதை மாணவர்களுக்கு உணரவைக்கும் ஐரோப்பியத் தத்துவங்களை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். . . இந்தியாவிலிருக்கும் கற்றறிந்தவர்களின் விடாப்பிடித்தனம், அரேபிய கலீஃப்புகளின் பிடிவாதத்தனத்தைவிட சற்றும் குறைந்ததல்ல என்பதை வெட்கத்துடன் கூறுகிறேன். இவர்கள் தங்களது சாஸ்திரங்கள் யாவும் எல்லாம் அறிந்த ரிஷிகளிடமிருந்து உருவாகி வந்தவை என நம்புகின்றனர். அதனால் அவை யாவும் தவறிழைக்கூடியவையல்ல என நம்புகின்றனர். . . ஐரோப்பிய நவீன அறிவியலின் வெளிச்சம் ஊடுருவிய இடங்களிலெல்லாம், அது எந்த அளவுக்கு ஊடுருவியதோ அந்த அளவுக்கு அங்கெல்லாம் அது இந்நாட்டின் வேதங்களின் செல்வாக்கை மங்கச் செய்தது. அதன் காரணமாக இத்தகைய கல்வியின் பரவலானது அதிகரித்தது. . . இதை முழுமையடையச் செய்ய வேண்டுமானால், புவியியல், வரலாறு, சுயசரிதை, எண்கணிதம், வடிவியல், இயற்கைத் தத்துவம், தார்மீகத் தத்துவம், அரசியல் பொருளாதாரம், உடலியல் ஆகியன போதிக்கப்பட வேண்டும். . . வங்காளமும், ஆங்கிலமும் அறிந்த ஆசிரியர்கள் நமக்கு வேண்டும். அதே நேரம், அவர்கள் மத பாரபட்சத்திலிருந்து விடுபட்டவர்களாக இருத்தல் வேண்டும்."

வித்யாசாகர் கடவுள் நம்பிக்கை அற்றவர் என்பது பலருக்குத் தெரியாது. அவர் பிராமணர் குலத்தில் பிறந்தவராயிருந்தாலும், **அவர் ஒருபோதும் பூணூல் அணிந்ததில்லை.** அவர் ஒருபோதும் கோயிலுக்குச் சென்றதில்லை. அவர் எழுதிய நூல்கள் எதிலும் கடவுள், ஆன்மீகம், அதாவது இயற்கையை மீறிய விவாதங்கள் எதையும் காண முடியாது. இவ்விஷயத்தை ஆராய ஜான் முர்டக் எனும் ஒரு மத போதகர் அப்போதைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். அவர் வித்யாசாகரை ஒரு தீவிர 'பொருள்முதல்வாதி' எனக் குற்றஞ்சாட்டினார். ஆனால் ஆன்மீக நம்பிக்கை கொண்ட ராமகிருஷ்ணர் அத்தகைய 'தீவிர பொருள்முதல்வாதி'யான வித்யாசாகருக்கு மரியாதை செலுத்தும் நிமித்தமாக அவரது வீட்டுக்குச் சென்றார். வித்யாசாகர் மற்றும் ராமகிருஷ்ணர் இருவருமே எனது முன்னோடிகள் என விவேகானந்தர் கூறினார். அதே காலத்தில் வாழ்ந்த மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஜோதிபா பூலே எனும் மற்றொரு மதிப்புக்குரிய மனிதரும் கூட மேற்கத்திய அறிவியல் கல்வி புகட்டுவதை ஆதரித்தார். ஆக, ஆங்கிலேய அரசாங்கம் சமஸ்கிருதக் கல்வியையும் கருத்துமுதல்வாதத் தத்துவத்தையும் போதிப்பதற்கு அழுத்தம் தந்து கொண்டிருக்கையில், ராம்மோகன், வித்யாசாகர், பூலே ஆகியோர் அதை எதிர்த்து நின்றனர் என்பதைக் காணலாம். "தவறே இல்லாமல் எந்த மத நூலும் இருக்கமுடியாது. வேதமும் கூட ஒரு மத நூல்தான். எனவே, அதிலும்கூட பொய்மைக்குப் பஞ்சமில்லை. . . அனைத்து மதங்களும் பொய்யானவையே, பழங்காலத்து மூட நம்பிக்கைகளே. மனித இனத்துக்கு இதைவிடப் பெரிய எதிரி எதுவும் இல்லை" என்றுகூட வித்யாசாகரைப் பின்பற்றிய மாபெரும் மனிதநேயவாதியும் இலக்கியவாதியுமான சரத் சந்திரர் கூறினார்.

அறிவியல்பூர்வ, பகுத்தறிவுக் கல்வியை வலியுறுத்துவதையும், மத பிடிவாதத்தனத்திலிருந்து விடுபட்ட ஒரு மனநிலையை வளர்த்தெடுப்பதற்கான அறைகூவலையும் ரவீந்திரநாத், பிரேம்சந்த், சுப்ரமணியபாரதி, ஜோதி பிரசாத் பூலே, நஸ்ருல்லின் இலக்கியங்களில் காணலாம். ஆனால் ஆர்எஸ்எஸ்–பாஜக இவற்றை எதிர்க்கின்றது. ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட்டும், சமஸ்கிருதம் போதிப்பதை வலியுறுத்தியும், அவை இந்நாட்டில் இந்துமத அடிப்படையிலான கல்வி முறையை அறிமுகப்படுத்த முயற்சிக்கின்றன. ஐரோப்பாவின் மற்றும் இந்தியாவின் பிரபல அறிவியலாளர்களின் புதுமையான கண்டுபிடிப்புகளை நிராகரித்துவிட்டு, "அனைத்தும் வேதங்களில் உள்ளதென்றும், பழங்காலத்து முனிவர்கள்தான் இவையனைத்தையும் கண்டு பிடித்தனர்" எனும் பச்சைப் பொய்யை மக்களிடம் நம்பவைத்திட ஆர்எஸ்எஸ்ஸும் பாஜகவும் முயற்சித்து வருகின்றன.

யானைமுகப் பிள்ளையார் சிலையை வைத்து, அது பண்டைய இந்தியாவில் ப்ளாஸ்டிக் சர்ஜரி இருந்ததற்கான அத்தாட்சி என பிரதமரே கூறுகிறார். ஆர்எஸ்எஸ்–பாஜகவின் துதிபாடும் இன்னும் சிலர், இதுபோன்ற எண்ணற்ற நகைப்புக்குரிய கதைகளைப் பரப்பி வருகின்றனர். ஆயினும் சமீபத்தில் நிலவுக்கு ஏவப்பட்ட சந்திரயான் விண்கலம் எந்த வேத நூல் பாசுரங்களின் அடிப்படையில் ஏவப்பட்டது என்பதை அவர்கள் இன்னும் வெளியிடவில்லை. மதநூல்களின் போதனைகளை எதிர்த்து அதை கடைபிடிக்காமல் ஒருகாலத்தில் அறிவியலானது இந்நாட்டில் முறையாக வளர்க்கப்பட்டு வேகமாக வளர்ச்சியடைந்தது என்பதே உண்மை. குறிப்பாக புத்தர் காலத்தில் அறிவியலானது கணிசமாக முன்னேற்றமடைந்தது. அதன் பின்னர், வேதாந்தங்களின் செல்வாக்கால் அது நின்றுபோனது. இந்திய நவீன அறிவியலின் முன்னோடியான ஆச்சார்யா ப்ரஃபுல்லா சந்திர ராய் கூட, தனது பிரசித்தி பெற்ற நூலான 'இந்து வேதியியல்' என்பதில் இக்குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

மதத்தின் அடிப்படையில் மன்னராட்சி நடைபெற்ற காலகட்டத்தில், அர்ப்பணிப்புத்தன்மை வாய்ந்த புரூனோ, கலிலியோ போன்ற ஐரோப்பிய அறிவியலாளர்கள் மிருகத்தனமாக துன்புறுத்தப்பட்டதுடன் கொலையும் செய்யப்பட்டனர். அது போன்ற திட்டமிட்ட தாக்குதலுக்கு எதிராக விவேகானந்தர் இவ்வாறு கூறுகிறார்: "இப்பிரபஞ்சத்தைப் பற்றிய நவீன வானியலாளர்கள், அறிவியலாளர்களின் கண்ணோட்டம் என்ன என்பதை நாம் அறிவோம். இத்தகைய கண்ணோட்டம் பழமைவாத சமயவாதிகளுக்கு எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பதையும் நாம் அறிவோம். புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வரும் போதெல்லாம், அவர்களின் வீடுகளில் வெடிகுண்டுகள் வீசப்படுவது போல பழமைவாதிகளுக்கு இருந்தது. இதன் காரணமாகத்தான் இத்தகைய சமயவாதிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் அறிவியல் ஆராய்ச்சியைத் தடுத்து நிறுத்த விரும்புகின்றனர்".

இந்துமத போதனையாளர்களின் முன்னோடிகளில் ஒருவரான விவேகானந்தரின் இத்தகைய கண்ணோட்டத்தின் அடிப்படையில் பார்க்கையில், ஆர்எஸ்எஸ்–பாஜக நடந்துகொள்ளும் விதத்தை எவ்வாறு விவரிப்பது? இப் பிரபஞ்சத்தைப் பற்றிய புதிய புதிய விஷயங்களை நவீன அறிவியல் கண்டுபிடித்துக்கொண்டிருந்த நேரங்களிலெல்லாம், சமயவாதத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் பீதியடைந்ததுடன், அவர்கள் அறிவியலை வளர்த்தெடுப்பதை தடுத்து நிறுத்த முயன்று கொண்டிருந்தனர் என விவேகானந்தர் நம்பினார். ஆனால், இப்போதைய இந்துத்துவ நாயகர்கள் நவீன அறிவியல் புதிதாக எதையும் கண்டுபிடிக்கவில்லை, பண்டைய முனிவர்கள் தான் அனைத்தையும் கண்டுபிடித்தனர் என்கின்றனர். விவேகானந்தருக்கும் இன்றைய சமயவாதிகளுக்கும் இடையேயான வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது இல்லையா!

இந்துத்துவாவிற்கு வக்காலத்து வாங்குபவர்கள் இதைத் தெரியாமல்தான் செய்கின்றனரா? நிச்சயமாக இல்லை. நவீன அறிவியலின் முக்கியத்துவத்தை மறுப்பதும், அறிவியல்பூர்வ பகுத்தறிவுச் சிந்தனை வளர்ச்சியை அழித்தொழிப்பதும், அதன்மூலம் பாசிச கண்மூடித்தன நம்பிக்கையை நிலைநிறுத்தும் பொருட்டு இந்நாட்டு மக்களின் மனநிலையை பண்டைக்கால மத பாரம்பரிய வாதத்தை நோக்கி திசைதிருப்பிக் கொண்டு செல்வதும் இவர்கள் நோக்கமாகும். ஒரு காலத்தில் ஆங்கிலேயர்கள் என்ன செய்தார்களோ, அது போல பாடுபடும் வெகுஜனங்களின் ஒற்றுமையை சீர்குலைக்க, இந்து அடிப்படைவாதத்தைத் தூண்டிவிடுவதும் மத துவேஷத்தை, மத மோதல்களைத் தூண்டிவிட்டு அதன்மூலம் இந்துக்களின் வாக்குகளை பெறுவதும் இவர்களின் மற்றொரு நோக்கமாக இருக்கிறது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

## ஆகஸ்ட் 5 – தோழர் பிரவாஸ் கோஷின் உரை

# இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆர்எஸ்எஸ் எதிர்த்தது

5ம் பக்கத் தொடர்ச்சி

மற்றொருபுறம், அனைத்து துயரங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்திய மக்கள், ஆளும் முதலாளித்துவத்துக்கு எதிராக, அதன் அடிவருடி அரசாங்கத்துக்கு எதிராக வெகுண் டெழாமல் இருப்பதை உத்தரவாதப்படுத்துவதும் அத்துடன் மக்களின் சோகங்கள், துயரங்கள், சோதனைகள், இன்னல்கள், வேலையில்லாமல் அவதிப்படுவது, பட்டினியாலும் மருத்துவ சிகிச்சை கிடைக்காததாலும் ஏற்படும் இறப்புகள் போன்ற இவற்றுக்கெல்லாம் காரணம் முற்பிறவி யில் செய்த பாவமே என்றும், விதிவசத்தால் ஏற்பட்டதே என்றும் மக்களை எண்ண வைப்பதும் இவர்களின் நோக்கமாக இருக்கிறது. இப்பிறவி யில் இத்தகைய அனைத்து வேதனைகளையும் துயரங்களையும் தாங்கிக்கொண்டுவிட்டால், கடவுளானவர் மிகவும் இரக்கப்பட்டு அடுத்த பிறவியில் அவர்களுக்கு தாராளமாக அள்ளிக் கொடுப்பார் எனபதாகும். இவையாவும் மக்களை குருட்டுத்தனத்தில் மூழ்கடிப்பதற்கும், அவர்களை மதத்தினுள் கட்டிபோடவும் இந்துத்துவ வெறி வாதிகள் ஏற்படுத்தியிருக்கும் மதவாதக் கோட்பாடுகளாகும். ஆர்எஸ்எஸ்–பாஜக மதத்தின் மீதுள்ள நேர்மையான ஈடுபாட்டினால் இதைச் செய்யவில்லை, மாறாக தெளிவான சதி நோக்கத்துடன் இதைச் செய்து கொண்டிருக்கிறது

இந்திய மறுமலர்ச்சியின் போற்றற்கரிய தலைவர்களின் மாபெரும் இலட்சியங்களையும் அவர்களின் போராட்டங்களையும் அலட்சியம் செய்வது, நவீன அறிவியலை நிராகரித்துவிட்டு ஆர்எஸ்எஸ்–பாஜகவின் கொடிய சதிச்செயல் களுக்கு ஆதரவளிப்பதா என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆர்எஸ்எஸ்–பாஜக வின் பின் சென்றால் நாடு மேலும் சிதறுண்டு போகாதா? மனித இனத்தின் மிகப்பெரும் எதிரியான பாசிசம் இன்னும் பலம் அடையாதா?

### இந்துத்துவாவுக்கு உண்மையாக இருக்கும் இவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தனர்

மற்றொரு அம்சத்தை பலரும் ஆழ்ந்து யோசிக்குமாறு நாங்கள் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். ஆயிரக்கணக் கான வீரத் தியாகிகள் ரத்தம் சிந்திய இந்திய விடுதலைப் போராட்டத்தை ஆர்எஸ்எஸ் 'பிற்போக்குத்தனமானது' என முத்திரை குத்தி விடுதலையை கடுமையாக எதிர்த்தது என்பதை நீங்கள் அறிவீர்களா? இதனால், ஆர்எஸ்எஸ் விடுதலைப் போராட்டத்தின் எந்தக் கட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை. ஆர்எஸ்எஸ், பாஜகவின் சிந்தனாவாதியான எம்எஸ் கோல்வால்கர் விடுதலைப் போராட்டம் குறித்து என்ன கூறினார் என உங்களுக்குத் தெரியுமா?

அவர் இவ்வாறு கூறுகிறார், "தேசம் பற்றிய நம் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்த எல்லை தேசியவாதம் மற்றும் பொது ஆபத்து குறித்த கருத்தியலானது, நம் உண்மையான இந்து தேசம் பற்றிய நமது நேர்மறை மற்றும் எழுச்சி யூட்டும் உள்ளடக்கத்தை இல்லாமல் செய்துவிட்ட துடன், பல 'விடுதலை இயக்கங்களை' உண்மையில் ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கங்களாக ஆக்கிவிட்டது. ஆங்கிலேய எதிர்ப்பு என்பது தேசபக்தி மற்றும் தேசியவாதத்துடன் ஒப்பிடப்படுகிறது. இந்த பிற்போக்குவாதக் கருத்தானது, விடுதலைப் போராட்டத்தின் ஒட்டுமொத்தப் போக்கின்மீது, அதன் தலைவர்களின் மற்றும் சாமானிய மக்களின் மீது, பேரழிவு விளைவை ஏற்படுத்தி யிருக்கிறது". *(அதாவது, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் எல்லை தேசியவாத அடிப்படையிலான சுதந்திரம் பற்றிப் பேசுபவர்கள் யாவரும் பிற்போக்குவாதிகள் என அவர் கூறுகிறார்.)*

மேலும் "இந்து இனத்தையும் தேசத்தையும் இதயத்தில் வைத்து புகழ்பாட விரும்புகிறவர்கள், அதற்கான செயல்பாட்டில் இறங்குபவர்கள், அந்த இலக்கை அடைய கடுமையாகப் பாடுபடுபவர் கள் மட்டுமே தேச பக்தர்கள். மற்றவர்கள் எல்லாம் துரோகிகள், அல்லது தேச நலனுக்குப் பகைவர்கள் ஆவர் . . ." என்கிறார்.

இந்த சிந்தனை எத்தகைய ஆபத்தானது என்பதை ஒருகணம் எண்ணிப் பாருங்கள்! இந்து தேசியவாத சிந்தனையின் அடிப்படையில் விடுதலை இயக்கம் நடத்தப்படாததால், அது 'பிற்போக்கானது' என்கிறார்கள்! இவர்கள் பார்வையில் தேச பந்து சித்ரஞ்சன் தாஸ், லாலா லஜ்பதிராய், பாலகங்காதரத் திலகர் தொடங்கி நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், குதிராம் போஸ், பகத் சிங், சுகதேவ், ராஜகுரு, சந்திரசேகர் ஆசாத், சூர்ய சென், அஸ்ஃபகுல்லா கான், பிரித்திலதா, பீர்பால கனகலதா வரையிலான இந்திய விடுதலை இயக்கத்தின் அனைத்துத் தலைவர் களும் தியாகிகளும் "பிற்போக்குவாதிகளே", "துரோகிகளே" இந்நாட்டின் பகைவர்களே".



**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் உரையாற்றுகிறார்**

பாஜகவை வழி நடத்தும் ஆர்எஸ்எஸ்ஸின் இந்த நிலைபாட்டை இந்நாட்டில் எவராவது ஏற்றுக்கொள்வார்களா? மகத்தான விடுதலை இயக்கத்தின் மரியாதைக்குரிய தலைவர்களையும் தியாகிகளையும் எவராவது அவமரியாதை செய்வார்களா?

அதிகாரத்தைக் கைப்பற்றி, அரசாங்க பிரச்சார எந்திரத்தை பயன்படுத்திக்கொண்டு, இந்த ஆர்எஸ்எஸ் தலைவர்கள் தங்களை 'தேச பக்தர்கள்' என்றும் 'தேசியவாதிகள்' என்றும் 'தேச சுதந்திரத்தின் பாதுகாவலர்கள்' என்றும் பெருமைப்படுத்திக் கொள்கின்றனர். பிரிட்டிஷ் இந்தியாவில், பிளவுபடாத வங்கம் மற்றும் வடமேற்கு எல்லை மாநிலமான சிந்து மாகாணத்தில், இந்துமகா சபையும் முஸ்லீம் லீக்கும் கூட்டணி அமைச்சரவையை ஏற்படுத் தினார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். பிளவுபடாத வங்காளத்தில், ஃப்ஸலுல் ஹக் முதன் மந்திரியாக இருந்தார், அதே நேரத்தில் சியாம பிரசாத் முகர்ஜி துணை முதல் மந்திரியாக இருந்தார். இந்த வரலாறு தவறென்று எவராவது நிரூபிக்க முடியுமா? இதை ஆதார உண்மைகளுடன் நம்மால் நிரூபிக்க முடியும்.

கோல்வால்கர் இவ்வாறுகூட பேசியிருக்கிறார்: "இந்துஸ்தானிலிருக்கும் அந்நிய இனங்கள், ஒன்று இந்து கலாச்சாரத்தையும் மொழியையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும், இந்து மதத்தை மதித்து கற்றுக்கொள்ளவும் மரியாதை தந்தாகவும் வேண்டும், இந்து இனம் மற்றும் கலாச்சாரத்தை, அதாவது இந்து தேசியத்தை பெருமைப்படுத் துவதைத் தவிர வேறு எந்தக் கருத்துக்களையும் நினைத்துப் பார்க்கக் கூடாது. . . இல்லையெனில், எதையும் உரிமை கோராமல், எந்தச் சலுகையும் இல்லாமல், குடிமக்களின் உரிமைகூட இல்லாமல், அதற்கும் கீழாக நடத்தப்பட்டு, இந்து தேசத்துக்கு முற்றிலும் அடிபணிந்து இந்நாட்டில் இருக்கலாம்." என்ன ஒரு ஆபத்தான வார்த்தைகள் பாருங்கள்!

நேரடியாகப் பேசுவதைப் பார்க்க முடியா விட்டாலும், அத்தகைய மனோபாவம் இப்போது ஆர்எஸ்எஸ்–பாஜக தலைவர்களின் பேச்சுக் களிலும் நடவடிக்கைகளிலும் அப்பட்டமாகத் தெரிவதைப் பார்க்கலாம். ஆர்எஸ்எஸ்–பாஜக வின் இத்தகைய மனோபாவத்தை கடுமையாக எதிர்த்து 1943இல் ஒரு கூட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இவ்வாறு கூறினார்: "இந்து மகாசபையானது .... மதத்தைப் பயன்படுத்தி அரசியல் களத்தில் நுழைந்திருப்பதுடன் அதன் போக்கில் அரசியலைக் கறைபடுத்திக்கொண்டு இருக்கின்றது. . . ஒவ்வொரு இந்து மதத்தவரும் இதைக் கண்டித்தாக வேண்டும்."

மற்றொரு உரையில், ". . . இந்தியாவில் பெரும்பான்மையினர் இந்துக்களாக இருக்கின்ற காரணத்தால், இந்துக்களின் அரசு ஏற்படுத்தப் படும் எனும் அச்சம் காணப்படுகிறது. இவை யாவும் கற்பனாவாத எண்ணங்களாகும்." என்று பேசுகிறார்.

"சுயநலக்காரர்களில் ஒரு பிரிவினர் தங்களின் குறுகிய பிரிவினைவாதக் கண்ணோட்டத்திலிருந்து அவர்களிடையே (அதாவது இந்து மற்றும் முஸ்லிம்களுக்கிடையே) சண்டை சச்சரவையும் மன வேற்றுமையையும் ஏற்படுத்திக் கொண்டிருக் கின்றனர். . . விடுதலை இயக்கப் போராட்டத்தில் அத்தகையவர்களையும் பகைவர்களாக் கருதிட வேண்டும்" என்று மேலும் கூறுகிறார்.

மதம் கலவாத அரசியலை அதாவது உண்மையான மதச்சார்பற்ற கண்ணோட்டதை ஏற்றுக்கொள்ளுங்கள் என அறைகூவல் விடுத்ததுடன், "அரசியலிலிருந்து மதத்தை முற்றிலும் விலக்கிவைக்க வேண்டும் . . . ஒரு மனிதனாக, அவர் விரும்புகிற எந்த மதத்தையும் கடைபிடிக்கும் முழு சுதந்திரம் ஓர் தனி நபருக்கு இருக்க வேண்டும். ஆனால் மதத்தின் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட எந்த கோட்பாடு களாலும் அரசியல் வழிநடத்தப்படக் கூடாது. அரசியலானது பொருளாதாரம், அரசியல், அறிவியல்பூர்வ கருத்தியல்களால் வழிநடத்தப்பட வேண்டும்." எனச் சுட்டிக்காட்டினார்.

"பிரதானமாக மதத்தின் அடிப்படையில் மக்களை குருட்டுத்தனத்தில் தள்ள முயற்சிக்கும் ஒரு நாடு, பிறவற்றின் அடிப்படையில் மக்களை ஒன்றிணைக்க முடியாத ஒரு நாடு, உண்மையில் துரதிருஷ்டம் பிடித்த ஒரு நாடாகும். மதத்தின் அடிப்படையில் இந்த மதம் ஏற்படுத்தும் பிரிவினைதான் ஆக ஆபத்தானது." என ரவீந்திரநாத்தும்கூட கூறினார்.

"உலகளாவிய மனிதகுலத்துக்கான இலட்சியங்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளுங்கள், இந்திய சித்தாந்தம், ஆசிய சித்தாந்தம் அல்லது இந்து சித்தாந்தத்தின் அடிப்படையில் இதை ஒருபோதும் மதிப்பிடாதீர்கள். ஏனெனில், அவ்வாறு மதிப்பிட்டால், அது ஒரு அற்ப எண்ணத்தின் குறுகிய இலட்சியத்துக்கு ஒத்ததாகவே இருக்கும், அது ஒருபோதும் உலகளாவிய மனிதகுலத்துக்கான பரந்துபட்ட இலட்சியமாக இருக்காது" என சரத் சந்திரர் கூறுகிறார்.

அவர் மிகுந்த வேதனையுடன் மேலும் இவ்வாறு கூறுகிறார்: "சன்னியாசிகளாக இருக்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகளாக ஆகிவிட்டனர். அதனால்தான் இந்நாடு இது போன்றதொரு துயரத்தில் உள்ளது."

"சாகித் இ அஸாம்" என இந்நாட்டு மக்களால் உயர்வாக மதிக்கக்கூடிய பகத்சிங், தூக்கிலிடப் படுவதற்கு சற்று முன்னர் இந்த கருத்தியலுடன் மாணவர்களையும் இளைஞர்களையும் ஊக்கு விக்க "நான் ஏன் ஒரு நாத்திகன்" எனும் ஒரு விலைமதிப்பில்லா கட்டுரையை எழுதினார். இந்நாட்டு மக்களும் மேற்குவங்கத்தில் வாழ்பவர் களும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், ரவீந்திரநாத், சரத் சந்திரர், பகத்சிங் போன்ற அக்கால அறிவு மேதைகளின் விலைமதிப்பில்லா போதனைகளை அனைத்தையும் கைவிட்டு விட்டு ஆர்எஸ்எஸ்–பாஜகவின் பிடியில் சிக்குவார்களா?

### உண்மையான இந்துக்கள் யார்?

இந்து மதத்தை உண்மையாக நம்புகிறவர்கள் விவேகானந்தரின் சில கூற்றுகளை தெரிந்து கொள்ளவேண்டும். அவர் இவ்வாறு கூறுகிறார்:

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஆகஸ்ட் 5 – தோழர் பிரவாஸ் கோஷின் உரை

# உண்மையான இந்துக்கள் யார்?

6ம் பக்கத் தொடர்ச்சி

". . . எந்த மதமும் மனிதனை துன்பப்படுத்திய தில்லை, எந்த மதமும் சூனியக்காரிகளை தீயிலிட்டு எரித்ததில்லை, இவை எவற்றையும் மதம் செய்த தில்லை. இவையனைத்தையும் செய்திட பின் எது தூண்டிவிட்டது? அவற்றையெல்லாம் அரசியல் தான் தூண்டுகிறது, மதம் ஒருபோதும் தூண்ட வில்லை."

*1893*இல் சிகாகோவில் பேசும்போது அவர் மேலும் கூறுகிறார், "பிரிவினைவாதம், சகிப்புத் தன்மையின்மை மற்றும் அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகள், வெறிவாதம் நீண்ட காலமாக இந்த அழகிய பூமியில் இருந்திருக்கிறது. இவையாவும் வன்முறை, வெறிவாதத்தால் இப்பூமியை நிறைத்துள்ளது. மானுட ரத்த வெள்ளத்தில் இப்பூமியை அடிக்கடி மூழ்கடித் திருக்கிறது. மனித நாகரிகத்தை அழித்தொழித்திருக் கிறது. ஒட்டுமொத்த தேசத்தையும் விரக்தியில் தள்ளியிருக்கிறது. இத்தகைய பயங்கர அரக்கர்கள் இல்லாதிருந்தால், மனித சமூகம் இப்போது முன்னேறியிருப்பதைவிட இன்னும் வெகு தூரத்துக்கு முன்னேறியிருக்கும்.

விவேகானந்தரின் இத்தகைய கூற்றுகளின் அடிப்படையில், ஆர்எஸ்எஸ்–பாஜகவின் உபதேசங்களையும் செயல்பாடுகளையும் தயவு செய்து ஆராய்ந்து பாருங்கள். இவர்கள் விவேகானந்தரைப் பின்பற்றுகிறார்களா? விவேகானந்தர் மேலும் கூறுகிறார்: "வேதங்கள், பைபிள், குரான் இல்லாத ஒரு உலகத்திற்கு மனித குலத்தைக் கொண்டு செல்ல நாங்கள் விரும்பு கிறோம். ஆனால், அனைத்துப் பணிகளும் வேதங்கள், பைபிள், குரான் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் வாயிலாக நிறைவேற்றப்படும். . . நாங்கள் உலகளாவிய சகிப்புத்தன்மையை நம்புவது மட்டுமின்றி, அனைத்து மதங்களையும் உண்மையென ஏற்றுக்கொள்கிறோம்.

எனக்கு ஒரு மகனிருந்தால், அவனை ஒருமுகப் படுத்தப் பயிற்றுவிப்பது, ஒரு பத்தி பிரார்த்தனையை செய்ய வைப்பது, மந்திரங்களை உச்சரிக்க வைப்பது தவிர, வேறு எந்த மத அறிவுறுத்தல் களையும் அவனுக்குப் பயிற்றுவித்திருக்க மாட்டேன். பிறகு, அவன் வளர்ந்து ஆளான பின் பல்வேறு கருத்துக்களையும் அறிவுரைகளையும் கேட்டுக்கொண்டு, அவனைப் பொருத்தமட்டில் அவன் உண்மையெனப் படுவதை தெரிந்துகொள் வான். அதே நேரத்தில் முழு சுதந்திரத்துடன், எவ்வித சச்சரவுமின்றி, என் மகன் ஒரு புத்த மத்தினனாகவோ, என் மனைவி ஒரு ஒரு கிருஸ்து வராகவோ, நான் ஒரு முஸ்லீமாகவோ ஆக முடியும் என்பது மிக இயற்கையானதே".

விவேகானந்தரின் இந்த கூற்றை ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் ஏற்றுக்கொள்வார்களா அல்லது அவரை மதவிரோதியெனக் கூறுவார்களா? விவேகானந்தரின் குருவான ராமகிருஷ்ணர் ஒரு மசூதியில் தொழுகையையும் ஒரு தேவாலயத்தில் பிரார்த்தனையும்கூட செய்திருக்கிறார். ராம கிருஷ்ணர் மிகத்தெளிவாக இவ்வாறு கூறியிருக் கிறார்: "தனது சொந்த மதம் மட்டுமே உண்மை யானது பிற யாவும் பொய்யானது என ஒருவர் கருதுவது நல்லதல்ல. கடவுள் ஒன்று மட்டுமே, இரண்டல்ல. பல்வேறு மக்கள் அவரைப் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். சிலர் அல்லா என்றும், சிலர் கடவுள் என்றும், இன்னும் பிறர் கிருஷ்ணரென்றும், சிவன் என்றும், பிரம்மா என்றும் அழைக்கின்றனர். இது ஏரியில் காணப்படும் நீர் போன்றதே. இந்துக்கள் அதை 'ஜலம்' என்றும் கிருஸ்துவர்கள் அதை 'வாட்டர்' என்றும், முஸ்லீம்கள் அதை 'பானி' என்றும் அழைக்கின்றனர். கடவுள், பகவான், அல்லா ஆகிய இவையனைத்தும் ஒன்றே என்பது இதன் பொருளாகும். ராமகிருஷ்ணரைப் பற்றி ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் என்ன சொல்வார்கள்? அவர் இந்து மதத்துக்கு எதிராகப் பேசினார், செயல்பட்டார் எனக் கூறும் துணிச்சல் இவர்களுக்கு உள்ளதா?

அயோத்தியில் ராமர் பிறந்த இடத்தை மீட்டெடுக் கிறோம் எனும் பெயரில், ஆப்கானிஸ்தானின் பாமியனில் தலிபான்கள் பழங்கால புத்தர்கால தொல்பொருள் கலைச் சின்னத்தை சின்னாபின்ன மாக்கியது போல, ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் பாபரி மஸ்ஜித் போன்ற வரலாற்றுச் சின்னத்தை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். இது தொடர்பாக மற்றொரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இந்து மதத்தின் நன்கு அறியப் பட்ட, இந்துக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட போதகர்களான சைதன்யர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் பாபரி மஸ்ஜித்தை இடித்துத் தள்ளிவிட்டு ராமர் பிறந்த இடத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒருபோதும் ஏன் அவர்கள் எழுப்பவில்லை? அவர்கள் கோழைகளாக இருந்தார்களா?

ராமர் பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்னரே, ராமாயணம் வால்மீகி முனிவரால் எழுதப்பட்டது எனக் கூறப்படுகிறது. பாபரி மஸ்ஜித் இருந்தபோது ராமச்சரித்திர மனஸ்ஸை துளசிதாசர் எழுதியிருக்கிறார். இவ்விரண்டு காப்பியங்களில், ராமர் பிறந்த இடத்தில் பாபரி மஸ்ஜித் கட்டப்பட்டிருக்கிறது என எவ்விடத்திலும் எழுதப்படவில்லை.

இது குறித்து விவேகானந்தர் என்ன கூறியிருக் கிறார் என்பதைக் கவனியுங்கள்: "ராமாயணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். . . மீறமுடியாத ஓர் அதிகாரபூர்வ காவியம் என ஏற்றுக்கொண்டு, ஏதோ ஒரு காலகட்டத்தில் ராமர் என ஒருவர் இருந்தார் என நம்ப வேண்டும் என்பதல்ல ... மதத்தின் மகிமை ராமாயணத்திலோ அல்லது மகாபாரதத்திலோ பாடப்பட்டுள்ளது என்பது, ராமர் அல்லது கிருஷ்ணர் என இருந்தார்களா, இல்லையா என்பதைச் சார்ந்திருக்கவில்லை. இந்து மதம் என்பது ஒருபோதும் எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் பின்பற்றியிருக்கவில்லை. புராணக் கதைகளில் தத்துவார்த்த உண்மை எந்த அளவுக்கு ஏற்கத்தக்க வகையில் கூறப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்திட, அத்தகைய புராணங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் கதாபாத்திரங்கள் உண்மையில் இருந்தனவா அல்லது அவையாவும் கற்பனையா என்பதை நுணுக்கமாக ஆராய வேண்டிய அவசியமே இல்லை.

ராமர் என ஒருவர் இருந்தார் என்பதை விவேகானந்தர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ராமர் என ஒருவர் இருந்ததை ஆராய வேண்டும் என அவர் கூறவு மில்லை. ராமாயணத்திலிருந்து உரிய படிப்பினையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மட்டுமே அவர் கேட்டுக்கொண்டார். இந்து மதத்தை உண்மையாக நம்புபவர்கள் இந்து மதத்தையும் ராமகிருஷ்ணரின், விவேகானந்தரின் போதனைகளையும் ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் சரியாகப் பின்பற்றுகிறார்கள் என இன்று கூறுவார்களா? அல்லது ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் அவர்களின் கேடுகெட்ட அரசியல் நலனைப் பாதுகாத்துக்கொள்ள இந்துமதத்தைப் பயன் படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கின்ற முஸ்லிம் அடிப்படைவாதிகளின் விஷயமும் இப்படித்தானிருக்கின்றது. இவர்களும்கூட ஹஸ்ரத் முகமதுவின் போதனைகளைப் பின்பற்று வதில்லை. மாறாக அதிகார வேட்கையைத் தீர்த்துக்கொள்ளவும் கீழ்த்தரமான அரசியல் லாபத்தை அறுவடை செய்துகொள்ளவும் இவர்கள் இஸ்லாம் மதத்தை துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கின்றனர்.

### மேற்கு வங்கத்தில் பாஜக வளர்ந்து வருவதின் பின்னணி

ஆர்எஸ்எஸ்–இந்து மகாசபையோ அல்லது டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி போன்ற பிரபலமோ எதுவும் பிளவுபடாத வங்கத்திலும் பின்னர் மேற்கு வங்கத்திலும் இடம்பிடிக்க முடியவில்லை. ஆனால் இன்று மேற்கு வங்கத்தில் பாஜக தனது கோர முகத்தைக் காட்டிக்கொண்டு, திரிணமூல் காங்கிரஸ் எதிர்ப்பு மனப்பான்மையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டி ருப்பது கவலைக்குரிய விஷயமாகும். முன்னதாக அவர்கள் ஏன் இங்கு இடம்பிடிக்க முடியவில்லை என்பதையும், இப்போது அவர்களால் எப்படி இடம்பிடிக்க முடிந்தது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், 80 வயதைத் தாண்டி இப்போது உயிரோடிருக்கும் ஒருசிலர் நன்கறிந்த, வரலாற்றின் மறந்துபோன அத்தியாயத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த வரலாற்றை அறிந்திருந்த பிறரெல்லாம் மாண்டுபோய் விட்டனர். இது குறித்து இப்போதிருக்கும் தலைமுறைக்கு எதுவும் தெரியாது.

மறுமலர்ச்சி சிந்தனையும் புரட்சிவாதமும் முதன் முதலில் வங்க மண்ணில்தான் தோன்றியது. அப்படித் தோன்றியதன் காரணம், வங்காளத் தவருக்கென தனிப்பட்ட குணம்சங்கள் இருந்ததனால் அல்ல. அவ்வாறு தோன்றியதன் காரணம், ஆங்கிலேய ஆட்சியின் முதல் தலைநகர மாக கொல்கத்தா இருந்ததனாலும், பிரிட்டிஷ் இந்தியாவின் இப்பகுதிக்கு மேற்கத்திய நாகரிகத் தின் சிந்தனைகள் முதலில் வந்ததாலுமேயாகும். அத்தகைய சிந்தனை உருவானதன் காரணம், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இங்கிருந்த மக்களைக் கொண்டு சில நிர்வாக உதவியாளர்களை உருவாக்க, ஆங்கிலக் கல்வியை வாகனமாகப் பயன்படுத்தியதால்தான். இதன் காரணமாக நவீன அறிவியல் சிந்தனை, இலக்கியம், ஜனநாயகக் கலாச்சாரம் இங்கு முதலில் மலர்ந்தது. வங்காளத்தில் இந்த நவீன சிந்தனைகள் வளம் பெற்றதைக் கண்டு ஈர்க்கப்பட்ட விடுதலை இயக்கத்தின் பிரபலத் தலைவரும் மகாராஷ்டிர மாநிலத்தின் சமூக சீர்திருத்தவாதியுமான கோபால கிருஷ்ண கோகலே, "இன்று வங்காளம் நினைப்பதை இந்தியா நாளை நினைக்கும்" என ஒருமுறை கூறினார்.

சுதந்திரப் போராட்ட காலத்தின்போது காணப் பட்ட ஆயுதந்தாங்கிய புரட்சிவாதத்தினாலும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் சமரசமற்ற போக்கினாலும், இடதுசாரிவாதத்தின் கோட்டை யாக வங்கம் விளங்கியது. இரண்டாம் உலகப் போரில் மாபெரும் ஸ்டாலின் தலைமையில் பாசிசம் தோற்கடிக்கப்பட்டு சோசலிசம் வெகு வேகமாக முன்னேறி, சீனப் புரட்சி வெற்றி கண்டதனால் இந்தியாவிலிருந்த, குறிப்பாக மேற்கு வங்கத்திலிருந்த கல்வியறிவுபெற்ற பிரிவினர் மார்க்சிசம், லெனினிசத்தை நோக்கி ஈர்க்கப் பட்டனர். இதன் காரணமாகத்தான் இங்கிருக்கும் மக்கள், குறிப்பாக படித்தவர்களும் மாணவர்களும் இளைஞர்களும் பரம பிற்போக்குவாத ஆர்எஸ்எஸ்–ஐயும் அதன் பின்னர் ஜனசங்கத்தின் மதவாத சிந்தனையையும் ஏற்கவில்லை. மேற்குவங்க மக்களின் இத்தகைய இடதுசாரி சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு, முதலில் பிளவுபடாத சிபிஐயும் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) அதன் பின்னர் சிபிஐ(எம்)மும் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி) சக்திவாய்ந்த இடதுசாரி கட்சிகளாக வளர்ந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

*1952*இல் நடைபெற்ற முதல் தேர்தலில், பிளவு படாத சிபிஐ பெரும்பாலான சட்டசபைத் தொகுதிகளையும், கொல்கத்தாவின் பெரும் பாலான பாராளுமன்றத் தொகுதிகளையும் பிடித்தது. காங்கிரஸ் அரசாங்கத்துக்கு எதிராக **1952**இல் நடந்த ட்ராம் ரயில் கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டம், **1953**இல் நடந்த வங்கம்–பீகார் இணைப்புக்கு எதிரான போராட்டம், **1959**இல் மற்றும் **1966**இல் நடந்த உணவுப் போராட்டங்கள் அனைத்துமே போர்க்குணமிக்க இடதுசாரிவாத வழியையொட்டியே நடத்தப் பட்டன. சிபிஐ, சிபிஐ(எம்) இரண்டுமே மார்க்சிசக் கட்சியாக இல்லாவிட்டாலும் அவை அன்றைய

தொடர்ச்சி 8ம் பக்கம்

## ஆகஸ்ட் 5 – தோழர் பிரவாஸ் கோஷின் உரை

# முதலாளித்துவ அமைப்பில் ஒரு இடதுசாரி அரசாங்கத்தை எப்படி நடத்தவேண்டும் என்ற வழிகாட்டலை தோழர் சிப்தாஸ் கோஷ் வழங்கியுள்ளார்

7ம் பக்கத் தொடர்ச்சி

நாட்களில் போர்க்குணமிக்க இடதுசாரி வாதத்தையே நடைமுறைப்படுத்தின.

அச்சமயம் எங்கள் கட்சி மிகச் சிறியதாக இருந்தது. ஆயினும், கூட்டு இயக்கத்துக்குள் எங்களின் புரட்சிகரப் பாதைக்கும் அவர்களின் வாக்கு அடிப்படையிலான சீர்திருத்தப் பாதைக்கும் இடையேயான முரண்பாடு இருந்தது. அத்தகைய காலகட்டத்தில், பெருகிவந்த ஜனநாயக இயக்கங் களை நசுக்கிட, காங்கிரஸ் அரசாங்கம் கடுமை யான அடக்குமுறையைக் கொண்டுவந்ததுடன், மிருகத்தனமான தாக்குதல்களையும் நடத்தியது. இதன் விளைவாக. நூற்றுக்கணக்கான மாணவர் களும் இளைஞர்களும் வீர மரணம் எய்தினர், பலர் கடும் காயமுற்றனர், பலர் சிறை சென்றனர். இந்திய முதலாளித்துவமும் காங்கிரஸ் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் அச்சமடைந்து, கொல் கத்தாவை ‘கெட்டகனவு நகரம்’ என்றும் ‘பேரணிகளின் நகரம்’ என்றும் அழைத்தனர். இதுபோலத்தான் ஆங்கிலேயர்கள் பிளவுபடாத வங்கத்தையும் கொல்கத்தாவையும் கண்டு அஞ்சினர்.

இத்தகைய போர்க்குணமிக்க இடதுசாரி இயக்கங்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, முதலில் பிளவுபடாத சிபிஐயும் பின்னர் சிபிஐ(எம்)மும் அவைகளின் செல்வாக்கை அதிகரித்துக்கொண்டன. மார்க்சிசக் கருத்தியலை வளர்த்தெடுப்பது ஒருபுறமிருக்கட்டும், சிபிஐயின் சிபிஐ(எம்)மின் தலைவர்கள் அவர்களின் தொண்டர்களை, ஆதரவாளர்களை, மக்களை, இடதுசாரி அரசியல் மற்றும் கலாச்சாரத்தை கடைபிடிப்பதில் எப்போதும் ஈடுபடுத்தியதில்லை. அல்லது மத வெறிவாதம், மதவாதம், ஜாதியவாதம் மற்றும் பிராந்தியவாதத்துக்கு எதிரான சமூக, கலாச்சார, சித்தாந்தப் போராட்டத்தை எப்போதும் வளர்த்தெடுத்ததில்லை. இதன் விளைவாக, பிரதானமாக மார்க்சிசம், இடதுசாரிவாதம் மற்றும் இடதுசாரிவாத முழக்கங்களை எழுப்பியதன் அடிப்படையிலேயே இங்கு இடதுசாரிவாத மனப்பான்மையானது வளர்ந்தது. அக்கட்சிகளின் பெரும்பான்மையான தலைவர்கள், தொண்டர் கள், ஆதரவாளர்கள், இடதுசாரிவாதத்தைப் பின்பற்றிய வெகுஜனங்கள் மத்தியில், இந்து–முஸ்லிம் உணர்வுகள் மெல்ல மெல்ல ஊறிப் போயிருந்தது. பல மத மூடநம்பிக்கைகளின் செல்வாக்கும் பிற பாரபட்சங்களும்கூட காணப் பட்டன. இவையனைத்தும் இருந்தபோதிலும், சாமானிய மக்கள் இடதுசாரிவாதத்தை நோக்கி ஈர்க்கப்பட்டனர்.

சக்திவாய்ந்த வெகுஜன இயக்கங்களின் தாக்கத் தினாலும், அத்துடன் கடுமையான காங்கிரஸ் எதிர்ப்பு மனநிலை பலமாக இருந்ததாலும், **1967**இல் மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது. சிபிஐ, சிபிஐ(எம்), எங்களது கட்சி, பிற இடதுசாரி கட்சிகள் மற்றும் வங்காள காங்கிரஸை உள்ளடக்கிய முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறுவப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர், மக்கட்பணித் திட்டங்கள் உருவாக்குவது பற்றிய விஷயத்தில், எமது கட்சிக்கும் சிபிஐ(எம்) உள்ளிட்ட அங்கம் வகித்த பிற கட்சிகளுக்கு மிடையே தீவிர வேறுபாடு தோன்றியது இன்று உங்களில் பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

லெனினது காலத்தில், ஒரு பூர்ஷ்வா அரசில் அரசாங்கத்தை நடத்தும் வாய்ப்பு ஏற்படுமானால், ஒரு மார்க்சியக் கட்சி என்ன செய்யவேண்டும் என்பது பற்றிய கேள்வி எழவில்லை. ஆதலால், ஒரு பூர்ஷ்வா பாராளுமன்றத்தில் ஒரு மார்க்சியக் கட்சியானது எதிர்க்கட்சியாக எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றிய வழிகாட்டலை மட்டுமே அவரால் வழங்க முடிந்தது. இதுவரையில் கண்டிராத சூழலை எதிர்கொண்டு, இவ்விஷயத் தில் மார்க்சிச–லெனினிசப் போதனைகளைப் பிரயோகித்து, ஒரு பூர்ஷ்வா அமைப்பில் ஒரு அரசாங்கத்தை எவ்வாறு நடத்துவது என்பதற்கான மார்க்சியக் கண்ணோட்டத்தை, அணுகுமுறையை வழங்கிடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழிகாட்டலை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தான் தந்திருக்கிறார்.

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் வறுமையிலிருக்கும் பாடுபடும் வெகுஜனங்களின் பிற பிரிவினரின் வர்க்க, வெகுஜனப் போராட்டங் களை முந்தைய அரசாங்கங்கள் கையாண்டது போல் இல்லாமல், ஐக்கிய முன்னணி அரசாங்கம் இவற்றை ஊக்குவிக்க வேண்டும் என்பதும், நியாயமான ஜனநாயக இயக்கங்களை காவல்துறை அடக்கவோ, ஒடுக்கவோ கூடாது என்பதும், தோழர் சிப்தாஸ் கோஷ் வழிகாட்டலின் அடிப் படையில் எங்களது முன்மொழிவாக இருந்தது. இதை ஒரு கொள்கையாக அறிவிக்க வேண்டும் என்றோம். இந்த முன்மொழிவுக்கு சிபிஐ(எம்) உள்ளிட்ட பிற கட்சிகள் ஒத்துப்போகவில்லை. இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால், அரசாங்கத்தில் இணைய மாட்டோம் என்றும் அரசாங்கத்தை வெளியிலிருந்து ஆதரிப்போம் என்றும் எங்கள் கட்சி கூறியது. அந்நேரத்தில் சிபிஐ(எம்) தொண்டர்களுக்கும் சாமானிய மக்களுக்கும் போராடக்கூடிய மனநிலை இருந்தது.

ஆக, நாங்கள் அரசாங்கத்தை வெளியிலிருந்து ஆதரிப்பது தெரிய வந்தால், சிபிஐ(எம்) மற்றும் பிற கட்சிகளின் தலைவர்கள், அவர்களது தொண்டர்களின் கேள்விகளை எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும். எனவே இறுதியில், சிபிஐ(எம்)மும் பிற கட்சிகளும் எங்களது கட்சி சிறிய கட்சியாக இருப்பதால், இக்கொள்கையை வைத்துக்கொண்டு பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது என நினைத்து, எங்கள் முன்மொழிவுக்கு இணங்கின.

ஆனால், எங்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரான தோழர் சுபோத் பேனர்ஜி அவர்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தொழிலாளர் அமைச்சராக ஆனதுடன், நியாயமான ஜனநாயக இயக்கங்களில் காவல்துறை தலையிடாமலிருப்பது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும் என்பதையும் அறிவித்தார். இது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் வறுமையிலிருக்கும் பிற பாடுபடும் வெகுஜனங்களை ஈர்த்ததுடன், வர்க்க, வெகுஜனப் போராட்டங்களை பரந்த அளவில் கிளர்ந்தெழ வைத்தது. “ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஓர் போராட்டக் கருவி” என்ற முழக்கம் எங்கெங்கும் எதிரொலித்தது. இதன் தாக்கம் பிற மாநிலங்களிலும் காணப்பட்டது.

இயற்கையாகவே, முதலாளித்துவ வர்க்கமும் பிற்போக்கு சக்திகளும் அச்சமடைந்தன. அவர்களின் தூண்டுதலால், **1969**இல் இருந்த இரண்டாவது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில், சிபிஐ(எம்)மும் பிற கட்சிகளும் எங்கள் கட்சிவசம் இருந்த தொழிலாளர் அமைச்சகத்தை பிடுங்கிக் கொண்டதுடன், முதல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மக்கள் பாராட்டிய அமைச்சரான தோழர் சுபோத் பேனர்ஜிக்கு பொதுப்பணித்துறை அமைச்சகத்தை ஒதுக்கித் தந்தனர். இதில் விருப்பம் இல்லையென்றாலும், ஜனநாயக இயக்கங்களில் காவல்துறை தலையிடக்கூடாது எனும் கொள்கையை செயல்பாட்டுக்குக் கொண்டுவரும் நலனை முன்னிட்டு, அந்த இலாக்காவை ஏற்றுக்கொண்டது.

பின்னர் சிபிஐ(எம்) தலைவர்கள் அவர்கள் பிடியை பலப்படுத்திக் கொள்ளவும், அவர்கள் கட்டளைப்படி செயல்படக்கூடிய அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் ஐக்கிய முன்னணிக்குப் பதிலாக வர்க்க–அடிப்படை முன்னணி என்று அழைக்கக் கூடிய கோஷத்தை எழுப்பியது. அதே நேரம், ஐக்கிய முன்னணியின் பிற கட்சிகளின் வெகுஜன செல்வாக்கு காணப்பட்ட இடங்களை அழித்தொழித்ததுடன், இயக்கங்களை வளர்த் தெடுப்பதற்குப் பதிலாக, இலவசங்களை வினியோகிக்கும் அரசியலையும் வேண்டியவர் களுக்கு சாதகம் புரியும் அரசியலையும் செய்ய ஆரம்பித்து, இவ்வாறாக அது இரண்டாவது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வீழ்ச்சியைக் கொண்டு வந்தது.

இத்தகைய ஒரு மோசமான சந்தர்ப்பவாத கொள்கையைக் கடைபிடித்ததன் மூலம் வெகுஜனங்கள் மத்தியில் அவர்களின் ஆதரவு அடித்தளத்தை அதிகரித்துக் கொள்ளவும், கட்சியின் பிடிக்குள் வேலையற்ற இளஞர்களைக் கொண்டுவரவும், ஆகப் பெரும் கட்சி என்கின்ற மேலாதிக்கத்தை நிறுவிக்கொள்ளவும் பிற கட்சிகளின் குரல்வளையை நசுக்கவும் முயற்சித்தது. அக்காலகட்டத்தில் சிபிஐ(எம்) கட்சியானது, பிற இடதுசாரி கட்சிகளையும் நக்சலைட்டுகளையும் தாக்கிக்கொண்டிருந்தது. இப்படித்தான் மேற்கு வங்க இடதுசாரி இயக்கம், கொலைபாதக அரசியலின், ரத்த வெள்ளத்தை ஏற்படுத்தும் அரசியலின் பிடியில் சிக்கியிருந்தது.

ஒருகாலத்தில் காங்கிரசின் வலதுசாரி கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு, இடதுசாரி வாதத்தை நோக்கி ஈர்க்கப்பட்ட மேற்குவங்க மக்களிடம் விரக்தியும் ஏமாற்றமும் சூழ்ந்து கொண்டது. இடதுசாரிவாதம் அதன் நம்பகத் தன்மையை இழக்கத் துவங்கியது. நீண்ட நாட்களுக்கு முன்னரே **1969**இல் தோழர் சிப்தாஸ் கோஷ் விடுத்த எச்சரிக்கை இன்று மிகவும் சரியாக இருப்பதை நினைவுகூறுவது பொருத்தமானது. அவர் கீழ்க்கண்டவாறு கூறினார்:

“இத்தகைய சூழலில், பிரிவினைக்கு வழிவகுக்கும் குழுக்களும், இன்றைய பாஜகவின் முன்னோடியான ஜனசங்கம் போன்ற மத அடிப்படைவாத சக்திகளும் காத்துக்கிடக்கின்றன. அவை சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக் கிடக்கின்றன. மக்களிடம் இருக்கின்ற இடது சாரிவாத இயக்கத்தின் மீதான ஈர்ப்பு குறைந்த வுடன் அவை வெளிப்படையாக வரும். ஆளும் சிபிஐ(எம்) தலைவர்கள் இந்த ஆபத்தை உணரவில்லை. கம்யூனிசக் கருத்தியலையும் அதன் சாராம்சத்தையும் காற்றில் பறக்கவிட்டு விட்டு, காங்கிரஸ் கட்சி செய்தது போன்றே இவர்கள் உயர்ந்த பேச்சுக்களை, இனிப்பான வார்த்தைகளை பேசிக்கொண்டு, மக்களை தவறாக வழிநடத்திக் கொண்டே இருக்கின்றனர். இவ்வாறாக இவர்கள் கம்யூனிசத்தின் கௌரவத்தைத் தரம்தாழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.”

அந்த எச்சரிக்கை இன்று எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது என்பதை நீங்கள் அனைவரும், சிபிஐ(எம்)மின் நேர்மையான தொண்டர்களும் ஆதரவாளர்களும் புரிந்துகொள்வீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.

அதன் பின்னர், **1972**இல், காங்கிரஸ் பெருமளவில் தில்லுமுல்லு செய்து அதிகாரத்துக்கு வந்து, சித்தார்த்த சங்கர்ராயை முதன் மந்திரியாகக் கொண்டு அரசாங்கத்தை அமைத்தது. அதிகாரத்தில் அமர்ந்தவுடனேயே, சித்தார்த்த சங்கர்ராய் அரசாங்கம் எங்களது கட்சி மீதும், சிபிஐ(எம்) மற்றும் நக்சல்பாரிகள் கட்சி மீதும் கடுமையான தாக்குதல் தொடுத்தது. அதில் பலர் கொல்லப்பட்டனர். மிக விரைவிலேயே இந்த அரசாங்கம் மேற்கு வங்கத்தில் மக்களால் வெறுக்கப்பட்டது. அத்துடன் அவசரநிலையைக் கொண்டுவந்ததால், அடக்குமுறை நடவடிக்கை களை மேற்கொண்டதால், நாடு முழுவதும் காங்கிரசும் தன் செல்வாக்கை இழந்தது.


இந்தச் சூழலில், மேற்குவங்க மக்கள் மீண்டும் இடதுசாரிவாதத்தின் பக்கம் சாய்ந்தனர்.

தொடர்ச்சி 9ம் பக்கம்

## ஆகஸ்ட் 5 – தோழர் பிரவாஸ் கோஷின் உரை

# சிபிஐ(எம்) ஆட்சியைப் போன்றதே திரிணமூல் ஆட்சியும்

8ம் பக்கத் தொடர்ச்சி



**ஆகஸ்ட் 5, 2019 அன்று கொல்கத்தா நேதாஜி உள் அரங்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு இளங்கம்யூனிஸ்டுகள் அணிவகுப்பு மரியாதை செலுத்துகின்றனர்**

ஆகப்பெரும் கட்சியாக இருந்ததால், சிபிஐ(எம்) கட்சிக்கு அது சாதகமாக ஆகிப்போனது. 1977இல் நடந்த தேர்தலில், ஆர்எஸ்எஸ், ஜனசங்கம், கங்கிரஸ் (ஓ) மற்றும் பிற கட்சிகளை உள்ளடக்கிய புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஜனதா கட்சியின் ஆதரவுடன், சிபிஐ(எம்) மேற்குவங்க மாநில சட்டசபைத் தேர்தலில் பெரும்பான்மைத் தொகுதிகளைக் கைப்பற்றி, அவர்களது கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு ஒரு அரசாங்கத்தை அமைத்தது. அது முதல், தொடர்ந்து அவர்கள் 34 ஆண்டுகளாக நீண்ட ஆட்சி புரிந்தனர்.

சிபிஐ(எம்)மும் அதன் கூட்டணிக் கட்சிகளும் 1977இல் அரசாங்கத்தை அமைத்தபோது, சிபிஐ(எம்) முதல் மந்திரியான ஜோதிபாசு பதவியேற்ற பின், வானொலியில் ஆற்றிய அவரது முதல் உரையில், "சிபிஐ(எம்) தலைமையிலான இந்த முன்னணியில் ஒரு அங்கமாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இல்லாததால், இனிமேல் குழப்பம் ஏதும் இருக்காது" என்று கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் இயக்கங்களையும் போராட்டங்களையும் அமைதியின்மை, ஒழுங்கின்மை என்று பார்ப்பதால், தங்களை எந்த தர்மசங்கடத்திலும் ஆழ்த்தாதீர்கள் என தொழிலதிபர்களுக்கும் பிற்போக்குவாத சக்திகளுக்கும் அவர் இதன் மூலம் உத்தரவாதம் தந்தார்.

எப்படியோ, அதிகாரத்துக்கு வந்த முதல் மற்றும் இரண்டாம் ஐக்கிய முன்னணி அரசாங்கங்களின்போது மிகப்பெரிய இடதுசாரி கட்சி என்ற அடிப்படையில் இடதுசாரிவாதத்தை வளர்த்தெடுப்பதிலும் ஜனநாயக இயக்கங்கள் நடத்துவதிலும் இருந்த தங்களது கொஞ்சநஞ்ச பங்கையும் முற்றிலும் நிறுத்திவிட்டனர். இவ்வாறாக அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெற்றுவிட்டனர்.

சிபிஐ(எம்) கட்சியின் நீண்டகால ஆட்சியின் போது, காவல்துறையையும் நிர்வாகத்தையும் முற்றிலும் சிபிஐ(எம்) கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொண்டு, சமூக விரோதிகளுக்கு பாதுகாப்பு தந்துகொண்டு, அதன் பின்னர் எதிர்க்கட்சிகளைப் பீதியடைய வைக்கவும், மிரட்டவும் அவைகளைப் பயன்படுத்தினர். பள்ளிகள் முதல் பல்கலைக்கழக துணை வேந்தர் வரை பாதுகாப்பு வீரர்களை அமர்த்துவது, அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் ஆட்களை நிரப்புவது, அரசாங்க வேலையிலிருப்பவர்களின் பதவி உயர்வு மற்றும் மாறுதல் என அனைத்தும் அக்கட்சியின் நலனுக்காக அக்கட்சியின் ஆணைப்படியே முடிவு செய்யப்பட்டன. வேண்டியவர்களுக்குப் பதவி தருவது உச்சத்துக்குச் சென்றது. சிபிஐ(எம்) தலைவர்கள் சித்தாந்த அடிப்படையில் இல்லாமலும், கோட்பாடு அடிப்படையில் இல்லாமலும் மனை வணிகம் (Real Estate Business), ஒப்பந்தத் தொழில் (Contracts), கட்டுமானப் பொருட்களுக்கான சிண்டிகேட்டுகளை நடத்துவது (Building Material syndicates), பணம் பறிப்பது மற்றும் கமிஷன் தொகையை பெற்றுக்கொள்வதற்கான எண்ணற்ற வாய்ப்புகள் வழங்கியதன் வாயிலாக, சொத்து சேர்க்கும் ஆசையை தந்து அவர்களது கட்சியில் எண்ணற்ற இளைஞர்களைச் சேர்த்தனர்.

சிபிஐ(எம்) கட்சியினர் தேர்தல்களில் பரந்த அளவில் தில்லுமுல்லுகள் செய்து, அச்சுறுத்தலை ஏற்படுத்தி அதிகபட்ச எண்ணிக்கையில் பஞ்சாயத்துக்களை, நகராட்சிகளை பெற்று அவற்றை ஊழலின் கூடாரமாக மாற்றினார்கள். அனைத்து கல்வி நிறுவனங்களிலும், கல்வி அமைப்பை கட்டுப்படுத்துவதிலும் அக்கட்சியின் பிடி இறுகியது. கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் நடைபெறும் மாணவர் சங்கத் தேர்தல்களில் சிபிஐ(எம்) கட்சியின் மாணவர் பிரிவான எஸ்எஃப்ஐ (SFI - Sudents Federation of India) எதிரணியினர் மீது கடுமையான தாக்குதல் நடத்தியதுடன், மாணவர் தேர்தலில் பிறர் போட்டியிடுவதைப் பலவந்தமாகத் தடுத்தனர். இவ்வாறு செய்ததன் போக்கில், பலவந்தமாக அனைத்து சங்கங்களையும் அவர்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். அட்சியின் முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டுவர, எல்லா இடங்களிலும் அவர்கள் உடல்ரீதியிலான தாக்குதல், பயங்கரவாதம், அச்சுறுத்தல், மிரட்டல், பலவந்தப்படுத்தி பதவி விலகச் செய்வது ஆகியனவற்றில் ஈடுபட்டனர்.

மற்றொருபுறம், தொழில் குடும்பங்கள், பெரும் வணிகர்கள், பெரும் விவசாயிகளின் வர்க்க நலனுக்கு அடிபணிந்து சேவை செய்ய, தொழிலாளர்களின், விவசாயிகளின் போராட்டங்களில் துப்பாக்கி சூடு நடத்தி பலரைக் கொன்றனர். பாடுபடும் தொழிலாளர்கள், விவசாயிகளின், நடுத்தர மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும், ஆங்கிலக் கல்வியை மீண்டும் கொண்டுவரக் கோரியும் பாஸ்–பெயில் முறையை ஆரம்பப் பள்ளி முதல் கொண்டுவரக் கோரியும், போக்குவரத்துக் கட்டண உயர்வை திரும்பப் பெறக் கோரியும் எங்கள் கட்சி பல இயக்கங்களை வளர்த்தெடுத்தது. அத்தகைய எங்கள் இயக்கங்கள் மீது சிபிஐ(எம்) அரசாங்கம் கண்மூடித்தனமான தடியடிப் பிரயோகம் செய்ததுடன், கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வீசியது. சிபிஐ(எம்) ஆட்சியின்போது எங்கள் கட்சியின் 171 தலைவர்கள், தொண்டர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். 51 தலைவர்கள், தொண்டர்கள் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

எங்களால் ஆரம்பிக்கப்பட்ட சிங்கூர், நந்தி கிராம் போராட்டங்களில் சிபிஐ(எம்) கட்சியினர் மிருகத்தனமான தாக்குதலைத் தொடுத்தனர். காவல்துறை மற்றும் சமூக விரோதிகள் உதவியுடன் நந்திகிராமில் அவர்கள் கூட்டுக் கொலைகளை, கூட்டுக் கற்பழிப்புகளை நடத்தினர். அவர்களின் அற்ப கட்சி நலனையொட்டி, பூர்ஷ்வாக்களைத் திருப்திப்படுத்துவதற்காக இவையனைத்தையும் செய்தனர். இவ்வாறாக, மார்க்சிச, இடதுசாரிவாத உன்னத லட்சியத்துக்கு பங்கம் விளைவித்து, மக்கள் பார்வையில் அத்தகைய உன்னத லட்சியத்தைத் தரம் தாழ்த்தினர். இவையாவும் மேற்குவங்க மக்களை சீற்றமடைய செய்தது.

இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பதவிப் போராட்டத்தை மையமாகக் கொண்டு காங்கிரசிடமிருந்து பிரிந்துவந்த ஒரு குழுவான திரிணமூல் காங்கிரஸ் (TMC) முன்னுக்கு வந்தது. இக்கட்சியை முதலாளித்துவ வர்க்கம் சிபிஐ(எம்) கட்சிக்கு மாற்றாக ஊடகங்களில் முன்னிறுத்தி தீவிரமாக விளம்பரப்படுத்தியது. சிபிஐ(எம்) கட்சியின் தவறான ஆட்சியினால் அதிருப்தியுற்றிருந்த மக்கள் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றனர். அத்தகைய மாற்றத்தைக் கொண்டு வருவோம் என்ற கோஷத்தை முன்வைத்து 2011 சட்டசபைத் தேர்தலில், திரிணமூல் காங்கிரஸ் மிகப்பெரும் வாக்குகள் பெற்று வெற்றிபெற்றது.

### சிபிஐ(எம்)மின் ஆட்சி போன்றே, திரிணமூல் காங்கிரசின் ஆட்சியும் ஊழல் மலிந்ததாக, மோசமான ஆட்சியாக இருக்கிறது

திரிணமூல் ஆட்சிக்கு வந்தபின், மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்பட்டதா? சிபிஐ(எம்) கட்சிக்குப் பதிலாக திரிணமூல் ஆட்சிக்கு வந்ததைத் தவிர வேறு ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா? சிபிஐ(எம்) ஆட்சியில் கட்சியின் கட்டுப்பாட்டில் காவல்துறையையும் நிர்வாகத்தையும் கொண்டுவந்தது, பரந்த அளவில் தேர்தல் தில்லுமுல்லுகள் செய்து தேர்தல் முடிவுகளை மாற்றியமைத்தது, அச்ச உணர்வை ஏற்படுத்தியது, அடியாட்களை வைத்து மிரட்டியது, எதிர்க்கட்சியினரை போட்டியிடவிடாமல் பலவந்தமாகத் தடுத்தது, கிரிமினல்களையும் சமூக விரோதிகளையும் தீனி போட்டு வளர்த்து அவர்களைப் பயன்படுத்தியது, கமிஷன் வாங்கியது, மனை வணிக (Real Estate Business) கூட்டணிகளை செழிக்க வைத்தது, லஞ்சம் வாங்கியது, இன்னும் பலவற்றைச் செய்த சிபிஐ(எம்) போலவே திரிணமூல் ஆட்சியும் அதன் கார்பன் நகல் போல இருந்தது. ஒரே வேறுபாடு, சிபிஐ(எம்) ஆட்சியானது ஒரு வகையில் அதன் கட்சிக்குக் கட்டுப்பட்டு செயல்பட்டதாகும்.

ஆக, இந்த அனைத்துத் தவறுகளும், சிபிஐ(எம்) ஆட்சியில் ஓரளவுக்கு திட்டமிட்டபடி, அந்தந்த மட்டத்திலிருந்த அவர்களது தலைவர்களின் கட்டுப்பாட்டில் திட்டமிட்டு நுட்பமாக நடைபெற்றன. ஆனால் திரிணமூல் ஆட்சியில் அவை ஒரு ஒழுங்கற்ற முறையில், அப்பட்டமாக, ஏடாகூடமாக நடந்து கொண்டிருக்கின்றன. திரிணமூல் ஆட்சியில் சாரதா, ரோஸ் வேலி பொன்சி ஃபண்ட் மோசடி போன்ற பெரும் மோசடிகள் நடந்தன. அத்தகைய மோசடிகளால் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். பாடுபட்டு சேமித்து வைத்திருந்த பணத்தை இழந்து திவாலாகிப் போனார்கள். இந்த அனைத்து மோசடிக்காரர்களும் சிபிஐ(எம்) ஆட்சியின்போது தங்கள் செயல்பாடுகளைத் துவக்கியவர்கள் ஆவார்கள் என்பதை குறிப்பிடுவது முக்கியமானதாகும். சாரதா லஞ்ச ஊழல் விவகாரத்தில் பயனடைந்தவர்கள் பெயர்களில், திரிணமூல் காங்கிரசின் சில முன்னணித் தலைவர்களின் பெயர்களும் இருந்தன.

அத்துடன், திரிணமூல் அரசாங்கம் முந்தைய சிபிஐ(எம்) அரசாங்கத்தின் அடியொற்றி மாநில கலால் வரியை அதிகரிக்கிறோம் என்ற பெயரில், மதுக்கடைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியது. ஆக, குடிகாரர்கள் பெண்கள் மீதான ஒழுங்கீனமும் அட்டூழியங்களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இம்மாநிலம் பெண்களைக்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## ஆகஸ்ட் 5 – தோழர் பிரவாஸ் கோஷின் உரை

# இடதுசாரிவாதத்தின் பலவீனம் பாஜக வளர்ச்சிக்கு உதவியது

9ம் பக்கத் தொடர்ச்சி

கடத்தும் கூடாரமாக மாறியிருக்கும் நிலையில், பெண்களுக்கான 'கன்னியாஸ்ரீ' திட்டத்தை துவக்கியிருக்கிறோம் என பெருமையடித்துக் கொண்டிருக்கும் திரிணாமுல் காங்கிரஸ், உண்மையில் பெண்கள் மீது எந்தக் கவலையும் கொள்ளவில்லை. அதிகரித்துவரும் இந்தக் குற்றச்செயல் குறித்து அரசாங்கத்துக்கு எந்தக் கவலையும் இல்லை.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆட்டம் கண்ட பின்னர், திரிணாமுல் தலைவர்கள் தூக்கத்திலிருந்து விடுபட்டு, கூட இருப்பவர்களே சுறுசுறுப்பாக கமிஷன் வாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். இதற்கு எதிராக, திரிணமூல் தலைவர் உடனடியாக ஊடகங்களில் கர்ஜிப்பதைக் காண முடிந்தது. ஆனால், இத்தகைய கர்ஜனை அத்தகைய ஊழலை ஒழிக்குமா? இதுவரையில் திரிணமூல் காங்கிரஸ் ஏதாவது செய்திருக்கிறதா எனக் கேட்கலாம். 'ஆம்' என்பதே இதற்கான எங்களின் விடை.

உதாரணமாக, தேர்தல் நலன் கருதி, திரிணமூல் காங்கிரஸ் 'கன்னியாஸ்திரி', மிதி வண்டிகள் வினியோகம், கழகங்களுக்கு (Clubs), துர்க்கா பூஜா கமிட்டிகளுக்கு, திரையரங்குக் குழுக்களுக்கு மற்றும் இசைக்கூத்து நிறுவனங்களுக்கு மிகப்பெரும் தொகையைத் தருவது போன்ற இலவசங்களை வழங்க எண்ணற்ற திட்டங்களைத் தொடங்கியிருக்கிறது. பல்வேறு பூஜைகளை செய்யும் அமைப்புகளுக்கும், கோவில்களைப் பழுதுபார்ப்பதற்கும் திரிணமூல் அரசாங்கம் நிதியுதவிகூட செய்துகொண்டிருக்கிறது. அத்துடன், மதத் தலைவர்களுக்கும் இந்து தகன இடங்களின் பூசாரிகளுக்கும் சிறப்புச் சலுகைத்தொகை தருவதை அறிமுகப்படுத்தியிருக்கிறது. திரிணமூல் தலைவரும்கூட இஸ்லாமியப் பண்டிகைகளில் முக்காடு அணிந்து தொழுகை நடத்தியிருக்கிறார்.

அடுத்த தேர்தலில் வெற்றிபெற என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற 'தொழில்ரீதியான' ஆலோசனையைப் பெற்றிட, சமீபத்தில் ஒரு பெரும் தொகையைத் செலவழித்து ஓர் நிபுணரை நியமித்திருக்கிறார்கள். திரிணமூல் அரசாங்கம் பெரும்பாலும் அவரது ஆலோசனைப்படியே இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. 'திதிகே போலோ' (அக்காவிடம் சொல்லுங்கள்) என்கின்ற புதிய உதவி எண்ணும்கூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் அடுத்த தேர்தலில் எந்த அளவுக்கு எதிர்பார்த்த முடிவுகளைத் தரும் என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும்.

திரிணமூல் மீது அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்த எண்ணற்ற மக்கள், திரிணாமுல் காங்கிரசுக்கு சரியான 'பாடம்' புகட்டுவதற்காக, தங்கள் விசுவாசத்தை ஆர்எஸ்எஸ்–பாஜகவுக்கு காட்ட ஆரம்பித்திருக்கின்றனர். அவர்களில் மாநில மற்றும் வட்டார அளவிலிருக்கும் திரிணமூல், காங்கிரஸ், சிபிஐ(எம்) கட்சிகளைச் சேர்ந்த பெரிய, நடுத்தர மட்ட, சிறிய அளவிலான பல தலைவர்கள் அடங்குவர். பிற மாநிலங்களில் செய்வதைப் போல, பாஜகவும்கூட வேலையற்ற இளைஞர்களுக்கு பணத்தாசை காட்டியும், வேலை தருகிறோம் என வாக்குறுதி தந்தும், பிற பயன்களைத் தருகிறோம் என்றும் கவர்ந்து வருகிறது.

மோசடிகள் செய்ததாக, லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டதாக மத்தியப் புலனாய்வுத்துறை மற்றும் அமலாக்கத்துறை ஆணையகத்தால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நகரசபைக் கவுன்சிலர்கள், திரிணமூல் மேயர்கள் உள்ளிட்ட பலர் நிலைமையைப் புரிந்துகொண்டு பாஜகவுக்கு மாறிவிட்டனர். திரிணமூலைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான சமூக விரோதிகள் பாஜகவுக்குச் சென்றுவிட்டனர். இந்த வரிசையில் இன்னும் பலர் காத்திருக்கின்றனர்.

இவ்வாறாக ஆர்எஸ்எஸ்–பாஜக மேற்கு வங்கத்தில் பலமடைந்து வருகிறது. ஆர்எஸ்எஸ்–பாஜக தலைவர்களும் இம்மாநிலத்தில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் எதிர்பாராமல் கிடைத்த வாக்குகளையும் தொகுதிகளையும் வைத்து, மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர். மேற்கு வங்கத்தில் **2021** தேர்தலில் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்தில் அமர்வதற்காக அவர்கள் இப்போது ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

### இடதுசாரிவாதத்தின் பலவீனம் பாஜக வளர்ச்சிக்கு உதவியது

உண்மையில் அதிர்ஷ்டவசத்தால் பாஜக எண்ணற்ற தொகுதிகளையும் வாக்குகளையும் பெற்றிருக்கிறதா? அல்லது வெறும் பணபலத்தால், மத்திய அரசாங்கத்தின் பின்புலத்தால் மட்டும் இந்த வெற்றி கிடைத்ததா? திரிணமூல் கூடத்தான் பெரும் பணம் செலவு செய்தது, இது பாஜாகவைவிட குறைவாக இருக்கலாம். பின்னர் இது எவ்வாறு முடிந்தது?

இதற்கான விடையை நீண்ட காலத்துக்கு முன்னரே தோழர் சிப்தாஸ் கோஷ் **1969**இல் விடுத்த எச்சரிக்கையில் நீங்கள் காணலாம். அது இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்பு, சிபிஐ(எம்) ஆட்சி செய்தது. சிபிஐ(எம்)மின் **34** ஆண்டுகால ஆட்சியின்போது சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் புரட்சிகரப் போக்கும் மகத்தான மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியமும் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, கம்யூனிசம் மற்றும் இடதுசாரிவாதத்தின் கௌரவமானது களங்கப்படுத்தப்பட்டு தரம் தாழ்த்தப்பட்டுவிட்டது. பிற மாநிலங்களில் ஆட்சியதிகாரம் காங்கிரஸ் அல்லது பாஜக என்றாகிவிட்டது. இன்னும் சில மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகளும் வல்லமைமிக்க போட்டியாளர்களாக மாறிவிட்டனர்.

ஆனால் மேற்குவங்கத்தில், வாக்கு சதவீதத்தைப் பொறுத்தமட்டில், தொண்டர்கள், ஆதரவாளர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் அமைப்புரீதியிலான பிடியைப் பொறுத்தமட்டில் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த சிபிஐ(எம்) மக்கள் ஆதரவை முற்றிலும் இழந்தது. திரிணமூலுக்கு மாற்றான ஒன்றாக அது மக்கள் மனதில் இடம்பெற முடியவில்லை. அதுமட்டுமின்றி, அதன் வாக்குவங்கி **28** சதவீதத்திலிருந்து **2** சதவீதமாகக் கீழிறங்கியது. மாறாக, திரிணமூல் ஆட்சியினால் வெறுப்புற்ற மக்கள், ஆர்எஸ்எஸ்–பாஜகவின் பின் சென்றுகொண்டிருக்கின்றனர்.

அவர்கள் இந்துக்களாக இருந்தாலும், முஸ்லிம்களாக இருந்தாலும் அரசியல் துருவமயமாதலில் திசைதிருப்பப்பட்டு, கீழ் மட்டத்திலிருக்கும் சிபிஐ(எம்) தொண்டர்களின் ஒரு பிரிவினர்கூட பாஜகவுக்கும், இன்னொரு பிரிவினர் திரிணாமுலுக்கும் வாக்களித்தனர். கிராமங்களிலும் பல்வேறு நகரப்பகுதிகளிலும்கூட, சிபிஐ(எம்)மின் தலைவர்கள், தொண்டர்கள் 'முதலில் ராமர் பின்னர் பாமர் அதாவது இடதுசாரிகள்' என்று கூறிக்கொண்டு பாஜவுக்கு வாக்களித்ததை மக்கள் கண்டனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முதலாவதாக திரிணமூல் பாஜகவால் தோற்கடிக்கப்பட வேண்டும், அதன் பின்னர் இவர்கள் ஆட்சிக்கு வர பாஜக இவர்களுக்கு உதவிபுரியும் எனச் சொல்ல நினைத்தனர். அதாவது, இவர்களுக்காக பாஜக தானாக ஆட்சியிலிருந்து இறங்கும் என்பதாகும். இது சிபிஐ(எம்)மின் பூத் ஏஜண்டுகள் கூட தங்களின் சொந்த வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை.

சிபிஐ(எம்) தலைமை தங்களைச் சுயபரிசோதனை செய்வதற்குப் பதிலாக தோல்விக்கான காரணம் அவர்களின் தொண்டர்கள்தான் என ஒட்டுமொத்தமாக குற்றம் சுமத்திவிட்டு தங்களது பொறுப்பை உதறித்தள்ளிவிட முடியுமா? இதற்குப் பொறுப்பு சிபிஐ(எம்) தலைவர்களும் அவர்களின் கொள்கைகளும் இல்லையா? ஆகப்பெரும் இடதுசாரி கட்சி என்ற முறையில் போர்க்குணமிக்க இடதுசாரிவாதத்தின் நம்பகத் தன்மையையும் மகத்துவத்தையும் அபகரித்துக்கொண்டு, ஆட்சியில் அமர்ந்தவுடன் வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை இவர்கள் ஈவிரக்கமற்று நசுக்கவில்லையா? இடதுசாரிவாதத்தின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்தவில்லையா? அவர்கள் தொண்டர்களிடம் இடதுசாரி அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படைக் கூறுகளைக்கூட இல்லாமல் செய்துவிட்டு அவர்களை மோசமான சந்தர்ப்பவாதத்தில் தள்ளவில்லையா? உயரிய தார்மீக, நன்மதிப்புக்களை வளர்த்துக்கொள்ளும் மனப்பான்மையையே அழித்தொழித்து, இளைஞர்களின் அறநெறியொழுக்க முதுகெலும்பை சிதறடித்தார்கள் என்பதை அவர்கள் மறுக்க முடியுமா? சமூக விரோதிகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லையா? அதிகாரம் என்பதன் ஆதாரம் பதவியில் இருப்பதுதான் என்றும், அது சித்தாந்தத்தினாலும், குணாம்சத்தினாலும், போராட்டத்தினாலும் அல்ல என்ற எண்ணத்தை அவர்கள் தொண்டர்களிடம் போதிக்கவில்லையா?

எங்கள் குற்றச்சாட்டு தவறானது என்றால், சிபிஐ(எம்)மின் தலைவர்கள் ஆதாரங்களுடன் அதை மறுக்கட்டும். அப்படிச் செய்தால், நாங்கள் எங்கள் கருத்துக்களை மறு ஆய்வு செய்கிறோம்.

பகைமையினால் நாங்கள் இவையனைத்தையும் கூறவில்லை. ஆழ்ந்த கவலையிருப்பதனால்தான் நாங்கள் இப்படிக் கூறுகிறோம். அனைத்து வகையான அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் கையாண்ட ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளும் காங்கிரசும்கூட மேற்குவங்கத்தில் இடதுசாரிவாத நீரோட்டத்தை அழித்தொழிக்க முடியவில்லை. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர், சிபிஐ(எம்) அவ்வாறு அழித்தொழிப்பதில் வெற்றியடைந்திருக்கிறது. உண்மையான இடதுசாரிவாத கண்ணோட்ட அடிப்படையில் அரசாங்கத்தை நடத்தியிருப்பார்களேயானால், **34** ஆண்டுகளில் அவர்களின் பலம் பலமடங்கு அதிகரித்திருக்கும். ஏன் தலைகீழாக நடந்தது? ஏன் அவர்களில் பலம் அழிவுற்றது?

சிபிஐ(எம்)மின் நேர்மையான தொண்டர்களும் தலைவர்களும் இதைப் பொறுமையுடன் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். ஏனெனில், கம்யூனிசம் எனும் உன்னத சித்தாந்தத்தால் ஈர்க்கப்பட்டு ஒருகாலத்தில் நீங்கள் சிபிஐ(எம்)மில் இணைந்தீர்கள். முன்னதாக, பிளவுபடாத சிபிஐ, அதன் பின்னர் சிபிஐ(எம்)மின் கொடிகளை கைகளிலேந்தி, கடுமையான துன்புறுத்தலையும், அடக்குமுறையையும், தியாக மரணத்தையும் பலர் எதிர்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் விளைவு ஏன் இன்று மிக மோசமாக ஏற்பட்டிருக்கிறது? ஏனெனில், "மார்க்சிசம் ஓங்குக" என்ற கோஷத்தைக் கேட்டும், எண்ணிக்கை பலத்தை வைத்தும் நீங்கள் கட்சியில் இணைந்தீர்கள். ஒரு கட்சியைக் கட்டுவது பற்றியும், அரசியல் பகுப்பாய்வு செய்வது பற்றியும், ஒரு கட்சியின் உத்தியையும் தந்திரோபாயத்தைப் பற்றியும் தலைவர்களின் தார்மீக–அறநெறியொழுக்கத் தரம், கலாச்சாரம், நடத்தை மற்றும் வாழ்க்கைமுறை மார்க்சிசத்துடன் பொருந்தியிருக்கிறதா, இல்லையா என்பதை கவனத்துடன் ஆராய வேண்டியிருப்பது பற்றியும் நீங்கள் அக்கறை கொள்ளவில்லை.

**(அடுத்த இதழில் தொடரும்...)**

# 3வது தமிழ்நாடு மாநில மாணவர் மாநாடு




மதுரையில் அக்டோபர் 11, 2019 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மாநில மாணவர் மாநாட்டில் தோழர் பாவிக் ராஜா அகில இந்திய துணைத்தலைவர் உரையாற்றுகிறார்



மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில மாணவர் மாநாட்டில் மதுரை, தேனி, சென்னை ஆகிய இடங்களில் இருந்து மாணவர்கள் கலந்துகொண்டனர்

அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) 3வது மாநில மாணவர் மாநாடு உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் கல்வியைப் பாதுகாப்போம், கலாச்சாரத்தைப் பாதுகாப்போம், மனிதகுலத்தைப் பாதுகாப்போம் என்ற முழக்கத்தோடு அக்டோபர் 11 அன்று மதுரை மாநகரில் நடைபெற்றது. மாநாட்டின் திறந்தவெளி அமர்வுக்கு ஏஐடிஎஸ்ஓ மாநிலத் தலைவர் தோழர் எஸ்ஹெச் திலகர், தலைமை தாங்கினார்.

மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியாக தோழர் சாந்திராஜ், அகில இந்திய துணைத்தலைவர் சுதந்திரப்போராட்டத்தில் சமரசமற்ற முறையில் போராடி இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் தோழர் ம ஜெயராமன், ஓய்வு பெற்ற ஆசிரியர், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி உறுப்பினர் அவர்கள் ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பேராசிரியர் ராமு மணிவண்ணன், சென்னை பல்கலைக்கழகம், ஆர் முரளி முன்னாள் முதல்வர், மதுரை கல்லூரி ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். தோழர் பாவிக் ராஜா அகில இந்திய துணைத்தலைவர், அவர்கள் பேசுகையில் தடையற்ற தேர்ச்சிக்கொள்கை 8ஆம் வகுப்பு வரை அமுல்படுத்தப்பட்டதினால் குஜராத்தில் 8, 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு அவரவர் பெயர்களை கூட எழுதத் தெரியவில்லை என்றார். மேலும் பண்டைய இந்தியாவில்தான் எல்லாமே கண்டுபிடிக்கப்பட்டது என்ற பொய்யான வரலாற்றை எழுதியுள்ள தினானத் பத்ராவின் பாடப்புத்தகங்களை பாடத்திட்டத்தில் சேர்த்து குஜராத் அரசாங்கம் தினானத் பத்ராவின் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளது. இந்த மக்கள்–விரோத, மாணவர் விரோதக் கல்விக் கொள்கைகளை எதிர்த்து போராடி கல்வியை, கலாச்சாரத்தை, மனிதநேயத்தை காக்க முன்வருமாறு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

பேராசிரியர் ராமு மணிவண்ணன் அவர்கள் பேசுகையில் 'நம்மைப்போன்ற பாகுபடுத்தப்பட்ட சமூகமானது பன்முகத்தன்மையோடு ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்ததாக உள்ளது. வெற்றிபெற்றவர்களைப் பற்றி மட்டுமே வரலாறு பேசுகிறது. ஒடுக்கப்பட்டவர்களின் வரலாறுகள் பேசப்படுவதில்லை. நாட்டின் பன்முகத்தன்மையை வரைவு தேசியக் கல்விக் கொள்கை 2019 சிதைத்துவிடும். ஒரு குழந்தையை பெற்றோர்கள் கூட காப்பாற்ற முடியாது. கல்வியால்தான் காப்பாற்றமுடியும்' என்று பேசினார்.

பேராசிரியர் முரளி பேசுகையில் 'படித்தவர்களுக்கே மாணவர்களுக்கே வரைவு தேசியக் கல்விக் கொள்கை 2019 என்றால் என்னவென்று தெரியாத சூழல் உள்ளது. தனியார் கல்லூரிகளில் மட்டுமல்லாது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் கூட அரசாங்கம் நிர்ணயித்துள்ள கட்டணங்களை விட அதிகமாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. துணைவேந்தர் முதல் பேராசிரியர்கள் நியமனம் வரை எங்கும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மாணவ, மாணவியர் சங்கத் தேர்தல்கள் தமிழ்நாட்டில் நடத்தப்படாமல் உள்ளது. மாணவர்கள் அந்த உரிமைக்காகப் போராட வேண்டும்' என்று கூறினார்.

தோழர் ஹில்டா மேரி, தமிழ்நாடு மாநில கன்வீனர், அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் உணர்ச்சிபூர்வமாக வாழ்த்தி உரையாற்றினார்.

அடுத்ததாக ஏஐடிஎஸ்ஓ, அகில இந்திய துணைத்தலைவர் தோழர் சாந்திராஜ் பேசுகையில் கல்வியை பற்றி விவேகானந்தரை சுட்டிக்காட்டி மனிதனை மனிதனாக மாற்றுவதே கல்வி என்று கூறினார். பெண்களுக்கான கல்விக் கூடங்களைத் திறந்த வித்யாசாகர் மதச்சார்பற்ற விஞ்ஞானபூர்வ ஜனநாயகபூர்வ கல்வி அனைவருக்கும் வேண்டும் என்று போராடினார். ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்று விக்டர் ஹியூகோ கூறினார். ஆனால் சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் நம்மை ஆளுபவர்கள் கல்வியை மனிதகுல எதிரியாக கருதுகிறார்கள் என்றார். விஞ்ஞான பூர்வ, ஜனநாயக பூர்வ, மதச்சார்பற்ற கல்வி தான் நமக்கு தேவை. மேலும் கல்வி மட்டுமே ஒரு பகுத்தறிவு சிந்தனை முறையை உருவாக்கும். எதற்காக நாம் கல்விக்கான போராட்டங்களை நடத்துகின்றோம்? மாணவர்களை எதற்காக திரட்டுகின்றோம்? மனிதனை மனிதனாக்குவதற்காக தான்... அப்படிப்பட்ட மாணவர் இயக்கத்திலே தங்களை இணைத்துக்கொண்டு வலிமைப்படுத்துவதோடு மாநாட்டை வெற்றிபெறச்செய்ய வேண்டுமென அறைகூவல் விடுத்தார்.

அடுத்ததாக மாநிலச் செயலாளர் ம ஜெ வால்டேர் அவர்கள் பேசும் போது இந்த சமூகம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது? கல்வி எப்படிப்பட்ட தாக்குதலுக்கு உட்பட்டு கொண்டு இருக்கிறது? மாணவர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும்? எதைச் செய்தால் இச்சூழ்நிலையை மாற்றியமைக்க முடியும் என்பதை பற்றி விவாதிப்பதற்காகத்தான் இந்த மாநாடு நடந்து கொண்டு இருக்கிறது என்றார். நமது மாநிலம் உட்பட நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் அரசாங்கம் அரசுப் பள்ளிகளை மூடிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தெரு முனையிலும் மதுக்கடைகளை திறக்கிறார்கள். சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளாகியும் ஆரம்பக்கல்வியை கூட அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. மன்னாராட்சி காலகட்டத்திலோ தாழ்த்தப்பட்ட பிரிவை சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்றால் காதில் ஈயத்தை ஊற்றுவது வழக்கமாக இருந்தது. இவற்றையெல்லாம் எதிர்த்துத்தான் கருணைக்கடல், கல்விக்கடல் என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற ஈஸ்வர சந்திர வித்யாசாகர் அவர்கள் 100க்கும் மேற்பட்ட பள்ளிகளை துவக்கினார். அனைவருக்கும் விஞ்ஞானபூர்வ, ஜனநாயகபூர்வ, மதச்சார்பற்ற கல்வி வேண்டுமென குரல் கொடுத்தார். அவரின் கோரிக்கைகளை நிறைவேற்ற போராட முன்வர வேண்டுமென மாணவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

மாலையில் நடைபெற்ற மாநாட்டின் அமர்வில் பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் உருவப்படத்திற்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

வரைவு தேசியக்கல்விக்கொள்கை 2019, தேசிய மருத்துவ கமிஷன் சட்டம், தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையைத் திரும்பப்பெற வலியுறுத்தியும், கல்வி வியாபாரமயம், தனியார்மயம், மதமயமாக்குவதை நிறுத்தக் கோரியும், அரசு பள்ளிகளை மூடக்கூடாது, கூடுதலாக அரசு பள்ளிகளைத் திறக்க வலியுறுத்துதல் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் ம ஜெ வால்டேர் அவர்களால் ஸ்தாபன அறிக்கை முன்வைக்கப்பட்டு விவாதித்து ஏகமனதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாணவர் இயக்கத்தின் வருங்கால பணிகளை செவ்வனே நிறைவேற்ற தோழர் ம ஜெ வால்டேரைத் தலைவராகவும், தோழர் எஸ் சுகுபாலாவை செயலாளராகவும், 10பேர் கொண்ட புதிய மாநில கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாநாட்டு நிறைவுரையாற்றிய தோழர் பாவிக் ராஜா, வளமான இயற்கை வளங்கள் கொண்ட இந்தியாவில் தனியொருவனுக்குணவில்லை எனில் ஜகத்தை அழித்திடுவோம் என்று முழங்கிய பாரதியார், 30 கோடி ஜனங்களுக்கும் பொதுவுடைமை சமுதாயம் படைப்போம் என்றார். ஆனால் இன்று எங்குபார்த்தாலும் பச்சிளம் குழந்தைகள் கூட, மொழிதெரியாமல் கூட, பிச்சை எடுக்கும் அவலம் நமது நெஞ்சைப் பிழிகிறது. வெறுமனே கல்விக்காக மட்டும் ஏஐடிஎஸ்ஓ போராடவில்லை. எங்கெல்லாம் அநீதி நடக்கிறதோ அவற்றை எதிர்த்து போராடுகிறோம். இயற்கைச் சீற்றங்கள் உள்ளிட்ட பாதகமான சூழ்நிலைகளில் மக்களின் துயர்துடைக்க நிவாரணப் பணிகளில் ஈடுபடுகிறோம். உயர்ந்த மாமனிதர்களின் வாழ்க்கைப் பாடங்களை மாணவ, மாணவியரின் மத்தியில் கொண்டு சென்று அவர்களது குணாம்சங்களை நாமும் இச்சமூகமும் பெற்று மனிதகுலத்தைக் காப்பதற்காகப் போராடுகிறோம். சமூகத்தின் எல்லா மாற்றங்களிலும் மாணவ, மாணவியரே பங்கேற்று ஒளியேற்றினர். அந்த பாரம் பரியத்தை உயர்த்திப் பிடிக்கும் ஏஐடிஎஸ்ஓவில் உள்ள நாமும் அப்பதாகையை உயர்த்திப்பிடிப்போம்' என அறைகூவல் விடுத்தார் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# நியாயமான கோரிக்கைகளுக்கான மருத்துவர்கள் போராட்டம்

தமிழகத்தில் சுமார் **15** ஆயிரம் மருத்துவர்கள் நான்கு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அக்டோபர் **25** முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவசர மருத்துவப்பணிகளைத் தவிர அனைத்து வேலைகளையும் நிறுத்தினர். தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தினர்.

அரசு மருத்துவர் போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவினரின் நான்கு அம்ச கோரிக்கைகளாவன: பட்ட மேற்படிப்பு (MD, MS) க்கான இடங்களில் அரசு மருத்துவர்களுக்கு **50%** ஒதுக்கீடு மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

மேற்படிப்பு முடித்து பணிக்கு திரும்பும் பொழுது பணியிடங்கள் ஒதுக்க, கலந்தாய்வு முறை (கவுன்சலிங்) மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

அரசு மருத்துவர்களுக்கு காலமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மருத்துவர் பணியிடங்களைக் குறைக்கும் திட்டத்தைக் கைவிட்டு இருக்கும் காலி இடங்களை நிரப்ப வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளுக்காக பல முறை அரசு நிர்வாகத்தையும் அமைச்சரையும் போராட்டக் குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர். சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் இவை நிறைவேற்றப்படும் என வாக்குறுதி அளித்திருக்கின்றார். ஆனால் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இவை நிறைவேற்றப் படவில்லை என்ற நிலையில் மருத்துவர்கள் போராட்டத்தில் இறங்கும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார்கள்.

### மருத்துவர்களின் கோரிக்கைகள் நியாயமானவையே

மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப் பிற்கான இடங்களில் **50%** ஒதுக்கீடு இதுநாள்வரை அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. நீட் தேர்வு அறிமுகத்திற்குப்பிறகு அந்தஒதுக்கீடு இல்லாமல் போய்விட்டது. தகுதியின் அடிப்படை யில் எம்பிபிஎஸ் பெற்று, மாநில அரசுத்தேர்வு முறைகளில் தேர்ச்சி பெற்றுத்தான் அரசுப் பணியை ஒரு மருத்துவர் பெறுகின்றார். குறைந்த பட்ச பணி அனுபவமான இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மேற்படிப்புக்கு தகுதி பெறுகின்றார். இதன் பிறகும் நீட் தகுதித் தேர்வு எதற்கு? மேலும், தகுதித் தேர்வு (நீட்) தகுதியை பரிசோதிப்பதற்கு அல்ல, தனியார் கல்லூரிகளின் சீட்டுக்களை நிரப்ப அரசாங்கம் செய்து கொடுக்கும் ஏற்பாடு என்பதை பலமுறை நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அரசுப் பணியிலிருந்துகொண்டு மேற்படிப்பைத் தொடரும் மருத்துவர்கள் அதன்பிறகும் குறைந்தபட்ச ஆண்டுகளுக்கு அரசுப்பணியில் தொடர்ந்தாக வேண்டும். பெரும்பாலும் பணி மூப்பு வரை இவர்கள் அரசு மருத்துவப்பணிகளில்தான் தொடர்கின்றார்கள். சுருங்கக்கூறின் அரசு மருத்துவர்களின் சேவை பொது மக்களுக்குச் சென்றடைகின்றது என்ற கூடுதல் காரணத்தாலும் இந்தக் கோரிக்கை நியாயமனதே.

மேற்படிப்பு முடிந்து திரும்புபவர்களுக்கு பணியிடங்கள் ஒதுக்கல் (அலாட்மென்ட்) கலந்தாய்வு முறையில் வெளிப்படையாக நடைபெற்றுவந்ததை மாற்றி அரசாணை மூலம் வழங்குவது முற்றிலும் எதேச்சதிகாரமானதும் ஊழல் முறைகேடுகளுக்கு வழிவகுப்பதும் ஆகும் என்று போராட்டக் குழு அச்சம் தெரிவிப்பதில் அர்த்தமுள்ளது. மேற்படிப்பு முடிந்து வருபவர் களின் குடும்ப சூழ்நிலையை கருதி பணியிட மாற்றத்தைக் கோரும் உரிமையைப்பறிப்பது முற்றிலும் நியாயமற்றதாகும். மக்களின் தேவைக் கேற்ப மருத்துவமனைகளில் பணியிடங்களை அதிகரித்து காலிப்பணியிடங்களை நிரப்பும் கோரிக்கை மருத்துவர்களுடையது மட்டுமல்ல; மக்களுடையதும் ஆகும்.

காலமுறை ஊதிய உயர்வு பிற துறைகளில் இருப்பது போலவே தமக்கும் நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றும் புதிதல்ல. ஆனால் இதனை வழங்கவேண்டும் என்று *2009*லேயே தமிழகம் விடுத்த அரசாணை இன்னமும் அமுலாக்கப்படவில்லை என சமூக நீதி சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க செயலளர் மீண்டும் மீண்டும் நினைவுறுத்தி வருகிறார்.

### போராட்டத்தை நசுக்க தமிழக அரசாங்கம் எடுத்த நடவடிக்கை கண்டனத்திற்கு உரியதாகும்

இதற்குமுன் மருத்துவர்கள் போராட்டக் குழுவினர் மனுக்களைக் கொடுத்தும் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் பலவடிவங்களில் போராடியும் அரசுத் தரப்பு வாக்குறுதிகள் ஏமாற்று என அறிந்தபிறகும்தான் இறுதிக் கட்டமாக காலவரையற்ற போராட்டத்தில் மருத்துவர்கள் இறங்கினர். ஆனால் அவர்களின் கோரிக்கை களுக்கு சற்றும் செவிசாய்க்காதது மட்டுமின்றி, வழக்கம்போல் பொதுமக்களை மருத்துவமனை களில் அவதிப்படவைத்து மருத்துவர்களை மக்களின் எதிரிகளாகச் சித்தரிக்கும் கேவலமான யுக்தியை தமிழகஅரசாங்கம் கையாண்டது. போராட்டத்தில் ஈடுபட்ட பலரை தண்ணியில்லாக் காடுகளுக்கு தமிழக அரசு இடமாற்றம் செய்துள்ளது. பணிக்குத் திரும்பாவிட்டால் புதிதாக மருத்துவர் களை ஆள் எடுத்துப் போடுவோம் மருத்துவர்களை நியமிப்போம் என்ற மிரட்டலையும் அரசாங்கம் விடுத்தது. மறுபுறம், பிரேக்–இன்–சர்வீஸ் தாக்கீதை ஒவ்வொருவருக்கும் அனுப்பி மிரட்டி பணியில் திரும்ப வரவைத்துள்ளது. இந்தத் தாக்கீதுபடி குறிப்பாக இளைய வயதுடைய, மேற்படிப்பிற்கு முயற்சிக்கும் மருத்துவர்கள் இதுவரை போட்ட சர்வீஸ் ஆண்டுக் காலத்தை இழக்க நேரிடும். இத்தகைய மோசமான அச்சுறுத்தல்களால் மருத்துவர்கள் தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

பிராவிடண்ட் ஃபண்ட், போனஸ், ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக சென்றமுறை போக்குவரத்து ஊழியர்களின் போராட்டமும், ஆசிரியர்–அரசு ஊழியர் சங்க சம்மேளனத்தின் (ஜாக்டோ–ஜியோ) போராட்டமும் அடக்குமுறையை ஏவித்தான் மாநில அரசாங்கம் கட்டுப்படுத்தியது. போராடிய நாட்களில் பிடிக்கப்பட்ட ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்வாறு போராடுவோர் மீது தமிழக அரசாங்கம் கொண்டுள்ள ஜனநாயக விரோதப் போக்கையும் எதேச்சதிகார அணுகுமுறையையும் பொதுமக்கள் அனைவரும் ஒரே குரலில் கண்டிக்க வேண்டும்.

### மருத்துவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் உலகமயக் கொள்கை அமுலாக்கலின் வெளிப்பாடாகும்

உலகமயக் கொள்கை தமக்கு மிகச்சாதகமானது என்பதை உணர்ந்த இந்திய முதலாளித்துவ வர்க்கம் எப்பொழுது காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதோ அப்போதிருந்தே தாராளமய–தனியார்மயப் பொருளாதாரக் கொள்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக நம்மைத் தாக்கி வருகின்றன. கல்வி, தொலைத் தொடர்பு போன்றே சுகாதாரமும் இனி அரசாங்கம் செய்யவேண்டிய சேவையல்ல. முன்னாள் காங்கிரஸ் அரசாங்கம் மத்தியில் படிப்படியாகக் கொண்டுவந்த தனியார்மயத்திற்கான மாற்றங்களை இந்நாள் பாஜக அரசாங்கம் துரித வேகத்தில் செய்துகொண்டிருக்கின்றது.

மாநிலத்தில் ஆட்சி செய்யும் அதிமுகவும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனைப் பூர்த்திசெய்ய இதே கொள்கைகளை மக்கள் கோபத்தையும் எதிர்ப்புகளையும் அலட்சியம்செய்து அல்லது நசுக்கி ஒடுக்கி செம்மையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நீட் தேர்வு, அரசு மருத்துவப் பணியிடங்கள் குறைப்பு போன்றவையெல்லாம் மத்திய–மாநில அரசாங்கங்களின் ஒட்டுமொத்த கொள்கையின் சிலஅமுலாக்கங்களாகும். நீட் நுழைவுத் தேர்வு போதாதென்று, பட்டம் பெற்று வெளியேறும் போது தேசியத் தகுதித் தேர்வாக எக்சிட் (Exit) தேர்வும் நடத்தப்படும் என்று கூறும் தேசிய மருத்துவ ஆணைய மசோதாவும் இரண்டு மாதங்களுக்கு முன்தான் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

### அரசு மருத்துவர்கள் போராட்டம் வெற்றியடைய அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்

இச்சூழ்நிலையில், இந்தப் போராட்டங்களுடன் நின்றுவிடாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி நீண்ட நெடிய போராட்டத்தையும் மருத்துவர்கள் நடத்த வேண்டும். போராட்டத்தை நசுக்க மாநில அதிமுக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மிகவும் கண்டனத்திற்குரியதாகும். பொதுமக்களும் இப்போராட்டத்தை ஆதரித்து மருத்துவர்கள் கோரிக்கை நிறைவேற மாநில அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் ■

கல்வியைக் காப்போம்! கலாச்சாரத்தைக் காப்போம்!
மனிதநேயத்தைக் காப்போம்!
கல்வியை வியாயாரமயம் மதமயமாக்குவதை முறியடிப்போம்
9வது அகில இந்திய
மாணவர் மாநாடு
நவம்பர் 26, 27, 28, 29 ஹைதராபாத்
அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம்
AIDSO



சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் *16* (ப எண் *18*), இராட்லர் தெரு, சூளை, சென்னை *600 007* அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் *10*, சுப்பாராவ் நகர், *2*வது தெரு, சூளைமேடு, சென்னை *600 094*, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**